Registered as a NewsPaper
இலவசப் பிரதி
விலை ரூபா : 10.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | கார்த்திகை-06 | 21-11-2005 | திங்கட்கிழமை | ஓசை-277

FedEx Express

உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் உள்ள உங்கள் உறவுகளுக்கு கடிதங்கள், பொதிகள் மற்றும் ஏனைய அன்பளிப்புப்பொருட்களை துரிதமாகவும்,விரைவாகவும்,பாதுகாப்பாகவும் உத்தரவாதத்துடன் அனுப்பிட

திருமுருகன் கொம் ஏற்

259, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

Tel - 021 222 7835

# வடக்கு -கிழக்கில் பலத்த மழை; காற்று,வெள்ளத்தால் பெரும் பாதிப்பு

## ஐ.தே.க.தலைமை குறித்து நாளை ஆராய்வு

ஐக்கிய தேசியக்கட்சியின் தலைமை பதவி குறித்து நாளை செவ்வாய்க் கிழமை நடைபெறவுள்ள ஐக்கிய தேசியக்கட்சியின் பாராளுமன்றகுழு மற்றும் மத்திய குழுக்கூட்டத்தில் முக்கியமாக ஆராயப்படவுள்ளதாக கட்சியின் பிரதிப்பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க கூறியுள்ளார்.

## சுனாமி தற்காலிகக் குடியிருப்புக்களில் இருந்து மக்கள் இடம் பெயர்வு

(நமது நிருபர்)

*வடக்கு-கிழக்கு பகுதிகளில் நேற்று முதல் தொடர்ச்சியாக பலத்த மழை பெய்து வருகின்றது. சில பகுதிகளில் மினி சூறாவளித்தாக்கம் ஏற்பட்டுள்ளது. இதனால் தாழ்வான பிரதேசங்களில் உள்ள குடியிருப்புக்களில் வெள்ள நீர் புகுந்துள்ளதுடன் மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர். சுனாமி தாக்கத்தால் பாதிக்கப்பட்டு தற்காலிகக் குடியிருப்புக்களில் வாழ்ந்து வந்தோர் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.*

முல்லைத்தீவு, அளம்பில், செம்மலைப் பகுதியில் நேற்று திடீரென வீசிய கடும் காற்றினால் மரங்கள் பல முறிந்து வீழ்ந்ததுடன் வாடிகளும் படகுகள் பலவும் சேதமடைந்துள்ளன.

நேற்று நண்பகல் பன்னிரண்டு மணிமுதல் சுமார் ஒரு மணி நேரம்வரை வீசிய இந்தக் கடும் காற்றினால் மக்கள் வீடுகளை விட்டு வீதிகளில் பதற்றத்துடன் ஓடினர்.

மாத்தளன்,பொக்கணை, செல்வபுரம் தற்காலிக குடியிருப்பு மக்கள் மற்றும் கோயில் குடியிருப்பு, மணல் குடியிருப்பு, கள்ளப்பாடு, வண்ணாங்குளம் மக்களும் பெரும்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வங்காள விரிகுடாவில் தாழமுக்கம்



வங்காள விரிகுடாவில் தென்மேற்குப் பகுதியில் நேற்று நண்பகல் தாழமுக்கம் ஒன்று நிலைகொண்டிருந்ததாகவும், அது வடமேற்கு நோக்கி மெதுவாக நகர்ந்து வருவதாகவும் கொழும்பு (12 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின்குரல் வானோசை- 15 சிறப்புற நடைபெற்ற விழா

(அலுவலக செய்தியாளர்)

புலிகளின்குரல் வானோசை-15 விழா நேற்று புலிகளின்குரல் அமலன் அரங்கில் சிறப்புற நடைபெற்றது பிற்பகல் நான்கு மணிக்கு ஆரம்பமான நிகழ்வில் பொதுச்சுடரை அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் ஏற்றினார். ஈகச்சுடரை தமிழீழ (12 ஆம் பக்கம் பார்க்க)



## யாழ். குடாநாட்டினது வீழ்ச்சிதான் தமிழீழத்தின் இறுதிப்போர்

### கேணல் சூசை தெரிவிப்பு

யாழ்குடாநாட்டினது வீழ்ச்சிதான் தமிழீழத்தின் இறுதிப் போராக இருக்கும் என்றுதமிழீழ கடற்படை சிறப்புத் தளபதி கேணல்சூசை தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற லெப்.கேணல் கங்கை அமரன் கடற்படைதுணைப்படை பயிற்சிப் பாசறையின் ஐந்தாம் அணிபயிற்சி நிறைவு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறுதெரிவித்தார்.

இனவாதக் கட்சிகளான ஜேவிபி, ஜாதிக ஹெல உறுமய ஆகிய கட்சிகளுக்கு ஆதரவாக சிங்கள தேசத்து மக்கள் வாக்களித்திருக்கிறார்கள்.கடந்த கால படிப்பினைகள் எல்லாவற்றையும் மறந்துவிட்டு சிங்களம் நிற்கிற போது அவர்களுக்கு உரிய வழியில்தான் தமிழர் பதில் கூற வேண்டியகட்டம் இது.



1983 ஆம் ஆண்டுமுதல் இது நாள் வரை இருந்த சிங்கள அரசியல் தலைவர்கள் தான் போர் என்றால் போர்-சமாதானம் என்றால் சமாதானம் என்று போர் முரசு கொட்டி தமிழர்களுக்கான இராணுவக் கட்டமைப்பை உருவாக்கிய பெருமைக்குரியவர்கள்.

2001 ஆம் ஆண்டு நாலாம் மாதம் வரை தமிழீழத்தில் படைநடத்திய சிங்களப்படைத்தளபதிகள் தோற்றுப் போனதாகத்தானே வரலாறு (12 ஆம் பக்கம் பார்க்க)

## சனாதிபதித் தேர்தல் மூலம் சிங்கள மக்கள் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை நிராகரித்துள்ளனர்

### த.தே. தொலைக்காட்சியில் அரசியல் ஆய்வாளர் திருநாவுக்கரசு



(கிளிநொச்சி)

இந்தத்தேர்தலின் மூலம் சிங்கள மக்கள் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை உண்மையாகவே நிராகரித்துள்ளார்கள். அதாவது இத்தேர்தல் முடிவு எந்தக் கணம் வெளிவந்ததோ அந்தக்கணத்திலிருந்து அரசியல் அர்த்தத்தில் புரிந்துணர்வு ஒப்பந்தம் காலாவதியாகிவிட்டது என அரசியல் விமர்சகர் மு.திருநாவுக்கரசு தெரிவித்துள்ளார்.

நேற்றிரவு தமிழீழ தேசிய தொலைக்காட்சியில் இடம்பெற்ற 'நிலவரம்' நிகழ்வில் அவர் இவ்வாறு தெரிவித்தார். மேலும் அவர் (12 ஆம் பக்கம் பார்க்க)

## பேரினவாதத்தினுடைய வெளிப்பாடுகளின் மொத்தத் திரட்சியே இத்தேர்தல் முடிவு

### த.தே. தொலைக்காட்சி நிகழ்ச்சியில் க.வே. பாலகுமாரன்

(கிளிநொச்சி)

தமிழீழ மக்கள் இற்றைவரை தாங்கள் பெற்றுக்கொண்ட அரசியல் வரலாற்று அனுபவத்துக்கு ஊடாக சிறிலங்கா அரசுகளுடைய நீண்ட கால அடக்குமுறைப் பேரினவாதத்துடைய வெளிப்பாடுகளின் மொத்தத் திரட்சியாக இந்தத் தேர்தல் முடிவு அமைந்திருக்கிறது.

இவ்வாறு விடுதலைப்புலிகளின் மூத்த உறுப்பினர் க.வே. பாலகுமாரன் தமிழீழ தேசிய தொலைக்காட்சியின் 'நிலவரம்' நிகழ்வில் தெரிவித்தார். (12 ஆம் பக்கம் பார்க்க)



*-நெடுந்தீவில் மாவீரர் நினைவுப்பந்தல்அமைத்த-*

## பொதுமக்களை அச்சுறுத்த படையினர் துப்பாக்கிப் பிரயோகம்; இருவர் கைது

(தீவகம்)

நெடுந்தீவில் மாவீரர்நாளை யொட்டி பொதுமக்கள் நினைவுப் பந்தல் அமைக்கும் பணியில் ஈடுபட்டிருந்த போது அதற்கெதிராக சிறிலங்கா கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளனர். அத்துடன் இருவரை கைதுசெய்துள்ளனர். (12 ஆம் பக்கம் பார்க்க)




## மாவீரர் நாள் நவம்பர் - 27

"மாவீரர்களின் சாவுகள், எமது சரித்திரத்தையே இயக்கும் உந்துசக்தியாக, எமது போராட்டத்தின் உயிர் மூச்சாக, எமது போராளிகளின் உறுதிக்கு உத்வேகமளிக்கும் ஊக்குசக்தியாக அமைந்துவிட்டது."

தமிழீழ தேசியத்தலைவர்
மேதகு. வே.பிரபாகரன் அவர்கள்.

## வரிவிளம்பரம்


### மாவீரர் படங்கள்

முத்த மாவீரர்கள், முதன்மை மாவீரர் படங்கள் எம்மிடம் உண்டு. தொகுதி 30=/ தொடர்பிற்கு அறிவமுது பொத்தகசாலை. (6937)

### புதிய பிரிவுகள் ஆரம்பம்

இணையத் தளங்களை உருவாக்கக் கூடிய உயர்கற்கை நெறி **FlashMX,** வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன. தொடர்புகட்கு: வின்நெற் கணனி பயிற்சி நிலையம், டிப்போ வீதி, கிளிநொச்சி. (சி.13074)

### இறப்பர் முத்திரை

கிளிநொச்சியில் பொலிமர் றபர் ஸ்டாம் (இறப்பர் முத்திரை) உடனுக்குடன் செய்து கொள்ளவும், போட்டோக்கொப்பி,லெமனேட்டிங் போன்றவைகளை உடனுக்குடன் செய்து கொள்ளவும், பிள்ளையார் பொத்தக சாலை. கண்டிவீதி, கிளிநொச்சி,
T.P.2285750 (சி.13263)

ரூபா 5/- மட்டும் ஐந்து ரூபாவுக்கு என்ன வாங்கலாம் விரைவில்...
(சி.13360)


# முள்ளியவளை வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்திய அதிகாரி

முள்ளியவளை வைத்திய சாலைக்கு நிரந்தர வைத்திய அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார். இதனால் முள்ளியவளை வைத்தியசாலையில் இதுவரைகாலமும் நிலவி வந்த வைத்திய அதிகாரி பற்றாக்குறை தற்போது நிவர்த்தி செய்யப்பட்டுள்ளது.வைத்திய கலாநிதி லவன் கடந்த 15 ஆம் திகதியிலிருந்து முள்ளியவளை ஆதார வைத்தியசாலையில் பொறுப்பினை ஏற்றுள்ளார். (20)

### தமிழீழ மாவீரர் நாளை முன்னிட்டு

# சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை நடத்திய கவிதைப் போட்டியில் வெற்றியீட்டியோர்

தமிழீழ மாவீரர் நாளை முன்னிட்டு சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையால் நடாத்தப்பட்ட கவிதைப் போட்டியில் வெற்றியீட்டியவர்களின் பெயர் விபரம் வெளியிடப்பட் டுள்ளது.

வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 26 ஆம் திகதி சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையின் தலைமைச் செயலகத்தில் இடம்பெறும்.

அன்றைய தினம் தமிழீழ தேசியத் தலைவரின் பிறந்தநாளினை முன்னிட்டு உயர்கல்வி நிறுவனங்களில் கல்வி கற்கின்ற மாணவர்களின் வசதிகருதி துவிச்சக்கர வண்டிகள் அன்பளிப்பாக வழங்கப்படவுள்ளது.

முதலாமிடம் "வாரும் நாமும் தொடர்வோம்" வ. யோகானந்த சிவம்-வட்டு வடக்கு வட்டுக்கோட்டை. இரண்டா மிடம் "மௌன நதிகள்" நல்லைஅமிழ்தன்-54-புதிய செம்மணி வீதி யாழ்ப்பாணம். மூன்றாமிடம் "இம்மியும் அரக்கார் இனி" தம்பிராசா பரமலிங்கம்-மூலபாரதி நாவலடி ஒழுங்கை வண்ணார் பண்ணை வடக்கு.

பாராட்டுச்சான்றிதழ்கள் பெறுவோர்.

" சாவு வாழ்வாகிறது" யோயூட்நிமலன்-காந்தரூபன் அறிவுச்சோலை, "விரைந்து வென்றிட வேண்டும் விடுதலை" தருமதி மாலாதேவி மதிவதனன் -மங்குளியன் வளவு அளவெட்டி, "எமக்கினியோர் போர் வேண்டும் தாயகமே" இசைமதி-இல89. உருத்திரபுரம் கிளிநொச்சி, "எழுந்து விடு தமிழா" பிரபாஜினி மட்டுவில் கிழக்கு சாவகச்சேரி, "ஈழநாட்டை தெளிவாக்கும்" செ. பரமநாதன்-மானிப்பாய் வீதி தாவடி, "காரிருள் அகலும்" வேல்மகன் -நக்கரன் வீதி அல்வாய் வடக்கு, "காவல் தெய்வங்கள்" வி.ஜெயபால்- வைத்தீஸ்வராக் கல்லூரி,"புரிந்தோம் மாவீரரே" கா.சயந்தன்-பரவிப்பாஞ்சான் கிளிநொச்சி, "மாவீர் களே நீங்கள் மரணத்தை வென்றவர்கள்" பூ.ஜெயமலர் விக்ரோரியாக் கல்லூரி, எப்படை தோற்கினும் எம்படை வெல்லும்" ப.யாழவள் பழம் வீதி கந்தர்மடம்.



மாவீரர்தினத்தை முன்னிட்டு பரந்தன் பிரதேசத்தில் பரந்தன் வர்த்தக சங்கம்- கரைச்சி வடக்கு ப. நோ.கூ சங்கம் - கோடன் நிறுவனத்தின் இணைந்து சிரமதானப் பணி வேலைகளில் ஈடுபட்டுள்ளதைப் படங்களில்காணலாம்.
(படம் வதனன்)

# க.பொ.த. (சா/த) மாணவர்களுக்கு மடுவலயத்தில் கருத்தரங்கு

றீடோ நிறுவனமானது மடு வலயக்கல்வி பணிமனையுடன் இணைந்து, இந்த வருடம் க.பொ.த சா/த பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான விசேட கருத்தரங்கு ஒன்றை ஏற்பாடு செய்துள்ளது. இக் கருத்தரங்கானது இன்று தொடக்கம் 24 ஆம் திகதி வரை மன் /பெரிய பண்டிவிரிச்சான் மாகவித்தியாலயம், மன் /ஆண்டான்குளம் றோ.க.த. பாடசாலை, மன்/ கருங்கண்டல் மகாவித்தியாலயம், மன் /இலுப்பைக்கடவை அ.த.க.பாடசாலை ஆகிய பாடசாலைகளில் நடத்துவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. இக் கருத்தரங்கில் மாணவர்கள் கலந்துகொண்டு பயன்பெறுமாறு வேண்டப்பட்டுள்ளது.

# சுனாமிப் பீதியால் மக்கள் இடம்பெயர்வு

மொரட்டுவ, பாணந்துறை கரையோரப் பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள் மீண்டும் ஒரு சுனாமி கடல் சீற்றம் ஏற்படுவதற்கான அறிகுறி தென்படுவதாக கூறி நேற்று பிற்பகல் தமது இருப்பிடங்களை விட்டு பாதுகாப்பான நிலப்பரப்பை நோக்கி இடம்பெயர்ந்ததாக பொலிசார் தெரிவித்தனர்.

இந்தப் பிரதேசங்களில் கடல்பரப்பின் நிறம் மாறியதை அடுத்தே இந்த மக்கள் சுனாமி கடல் சீற்றம் ஏற்படலாம் என்ற சந்தேகத்தின் பேரில் இடம்பெயர்ந்தனர்.எப்படியிருப்பினும், சுனாமி ஏற்படுவதற்கான அறிகுறிகள் இல்லை என மக்களுக்கு உணர்த்தியதை அடுத்து, இடம்பெயர்ந்த மக்கள் தற்சமயம் தமது வழமையான இருப்பிடங்களுக்கு திரும்பி உள்ளதாக மொரட்டுவ மற்றும் பாணந்துறை பொலிசார் தெரிவித்துள்ளனர்.

சுமாத்திரா தீவுப் பகுதியில் நேற்றுக் காலை நில அதிர்வு ஏற்பட்ட போதிலும், இலங்கைக்கு எந்தவிதமான பாதிப்பு எதுவும் இல்லை என்றும் வளிமண்டலவியல் நிலையம் தெரிவித்துள்ளது. (32)

# யாழ்.பல்கலைக்கழகத்தில் நிறுவப்பட்டுள்ள மாவீரர் நினைவுத்தூபி இன்று திறப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் நிறுவப்பட்டிருக்கும் மாவீரர் நினைவுத்தூபி இன்று திறந்துவைக்கப்படவுள்ளது .

யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத்தின் வளாகத்தினுள் மாவீரர்கள் நினைவுத்தூபி ஒன்று யாழ் பல்கலைக் கழக சமூகத்தினரால் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

மாவீரர்களது தமிழ் தேசியவிடுதலைகுறித்த உணர்வுகளைச் சித்தரிக்கும் வகையில் நிறுவப்பட்டுள்ள இந்நினைவுத்தூபி மாவீரர் வார ஆரம்ப தினமான இன்று எழுச்சிபூர்வமான முறையில் திறந்துவைக்கப்படவுள்ளது என்று சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையினர் தறிவித்துள்ளனர்.

யாழ்பல்கலைக்கழக வளாகத்துள் கைலாசபதிகலை அரங்குமுன்றலில் மேற்படி நினைவுத்தூபி நிறுவப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (33)

# யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற கலை இலக்கியப் பெருவிழா

யாழ். மாவட்ட செயலகம் கலாச்சார அலுவல்கள் மரபுரிமைகள் அமைச்சின் அனுசரணையுடன் ஏற்பாடு செய்த தேசிய கலை இலக்கியப் பெருவிழா யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஸ் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக துணைவேந்தர் கலாநிதி பேராசிரியர் சு.மோகனதாஸ் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். சிறப்பு விருந்தினர்களாக யாழ் மாவட்ட முன்னாள் மேலதிக அரசாங்க அதிபர் வடக்கு கிழக்கு மாகாண பொதுநிர்வாக அமைச்சின் பொதுச் செயலாளர் திருமதி கமலா சிவசிதம்பரம், வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை அதிபர் திருமதி க.பொன்னம்பலம் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக ஊடகவளங்கள் பயிற்சி நிறுவனத்தின் இணைப்பாளர் கலாநிதி பேராசிரியர் அ.சண்முகதாஸ் சிறப்புரையை நிகழ்த்தினார். இதனைத் தொடர்ந்து யாழ். மாவட்டத்தில் பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் ரீதியாக தெரிவு செய்யப்பட்ட கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

தமிழர்களது கலை கலாச்சார விழுமியங்களை கட்டிக்காக்க வேண்டிய கடமைப்பாடு கலை கலாச்சார பேரவைக்குரியதாகும் என வடகு கிழக்கு மாகாண பொது நிர்வாக அமைச்சின் முன்னாள் செயலாளர் திருமதி க. சிவசிதம்பரம் தெரிவித்தார்.

கலை இலக்கிய விழாவில் விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றியபோதே இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்;

எமது இனம் தனக்குரிய பண்பாட்டு விழுமியங்களை பேணிக்காக வேண்டிய கட்டாய கடப்பாடு தற்போதய காலகட்டத்தில் அவசியமான ஒன்றாகவே இருக்கிறது . எமது இனம் தனது உரிமைக்காகப்போராடுகின்ற ஓர் தேசிய இனமாக இருந்து வருகின்றது. எமது கலை கலாச்சார விழுமியங்களை அழித்துவிடுவதற்கு சில அந்நிய சக்திகள் முனைப்புடன் செயற்பட்டு வருகின்றமை கவலைக்குரிய விடயமாக இருக்கின்றது. அவ்வாறு செயற்படுகின்ற சக்திகளின் செயற்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டியதேவை ஏற்பட்டுவிட்டது.இந்த நிலையில் எமது கலைகலாச்சார விழுமியங்களை வளர்த்தெடுப்பதற்கு கிராமியப் பிரதேச மாவட்ட மட்டங்களில் இருக்கின்ற கலை இலக்கிய கலாச்சார உத்தியோகத்தர்கள் பாடுபட வேண்டும்.

தமிழர் தாயகப் பிரதேசங்களில் பாரம்பரிய கலை கலாச்சார விழுமியங்களுடன் தொடர்படைய கலாச்சார நிகழ்வுகள் பெருமளவு நடைபெறாத போதிலும் புலம் பெயர்ந்து மேற்கு நாடுகளில் வாழ்கின்ற எமது உறவுகள் அத்தகைய நிகழ்வுகளைப் பெரும்பாலும் பின்பற்றுகின்றனர்.

இதனைவிட எமது இளம் சமுதாயம் மேற்கத்தேய கலாச்சாரத்தினால் அழிவடைந்து வலுக்குன்றிய ஓர் இனமாக வளர்ச்சி பெற்று விடுமோ என்ற ஓர் காலகட்டத்தில் இளைய தலைமுறைகள் சென்றுகொண்டிருப்பதைக் காணக் கூடியதாக இருக்கின்றது.இந்த நிலை மாற்றமடைய வேண்டும்.எமது பண்பாட்டு விழுமியங்கள் பேணிப்பாதுகாக்கப்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (கீ.41)

# மன்னாரில் மாவீரர் தினத்தை உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்க ஏற்பாடு

(மன்னார்)

மன்னாரில் எதிர்வரும் மாவீரர் தினத்தினை உணர்வுபூர்வமாக அனுஷ்டிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மாவீரர்களின் பெற்றோர்களை கௌரவித்தல், வீதிகளில் சிவப்பு, மஞ்சள் கொடிகளால் வீதிகளின் இருமருங்கிலும் அலங்கரித்தல், முக்கிய சந்திகளில் வளைவுகள் அமைத்தல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதேவேளை மாவீரர் தினத்தை முன்னிட்டு வலைப்பந்தாட்டப் போட்டி, உதைபந்தாட்டப் போட்டி, கிரிக்கெட் போட்டி என்பன நேற்று முன்தினம் அடம்பன் காத்தான் குளம் பாடசாலை விளையாட்டு மைதானத்தில் ஆரம்பிக்கப்பட்டன. தொடர்ந்து நேற்றுவரை இந்தப்போட்டிகள் நடைபெற்றன. (18)

# அநுராவின் அமைச்சு பறிக்கப்படும்; ஜெயராஜ்பெர்னாண்டோபுள்ளே தெரிவிப்பு

சிறிலங்கா வெளிவிவகார அமைச்சர் அநுரா பண்டாரநாயக்கவின் அமைச்சுப் பொறுப்பு பறிக்கப்படும் என்று வர்த்தக வாணிபத்துறை அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே கூறியுள்ளார். அலரி மாளிகையில் மகிந்த ராஜபக்ஷ நடத்திய முக்கிய கூட்டம் ஒன்றில் அநுரா பங்கேற்கவில்லை.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே, மகிந்தவின் சனாதிபதிப் பொறுப்பில் அநுரா தற்போதைய நிலையை இழந்துவிடுவார் என்றும் அவர் உள் விவகாரங்களுக்கான அமைச்சராக நியமிக்கப்படக் கூடும் என்றும் கூறினார். நாட்டின் முக்கியமான காலகட்டத்தில் தீவிரமாகச் செயற்படக் கூடிய லக்ஷ்மன் கதிர்காமர் போன்றவர்கள் தான் வெளிவிவகார அமைச்சுப் பொறுப்பு வகிக்க வேண்டும் என்றும் ஜெயராஜ்பெர்னாண்டோ புள்ளே கருத்துத் தெரிவித்தார்.

# ஈராக்கிலிருந்து அமெரிக்கப்படைகள் தற்போது திரும்பாது என்கிறார் புஷ்



(பூசன்)

**ஈராக்கிலிருந்து அமெரிக்கப் படைகளை திரும்பப்பெறும் எண்ணம் தற்போது இல்லை என்று அமெரிக்க சனாதிபதி புஷ்கூறியுள்ளார்.**

ஈராக்கில் சதாம் ஹுசைனை பதவியில் இருந்து நீக்கியபின் அங்கு அமெரிக்க ஆதரவுடன் புதியஆட்சி நடைபெற்று வருகிறது. இதனால் போருக்குப் பின்னும் அங்கு தொடர்ந்து அமெரிக்கப் படைகள்இருந்து வருகின்றன.

அமெரிக்கப் படைகள் மீது சதாம் ஹுசைனின் ஆதரவாளர்களும் தீவிரவாதிகளும் நடத்திவரும் தாக்குதல்களில் இதுவரை ஆயிரக்கணக்கான வீரர்கள் பலியாகியுள்ளனர். இதனால் ஈராக்கிலிருந்து படைகளை திரும்பப் பெறவேண்டும் என்ற கோரிக்கை அமெரிக்காவில் வலுத்து வருகிறது.

ஆனால் தற்போதுள்ள சூழ்நிலையில் ஈராக்கில் இருந்து படைகளை திரும்பப் பெறும் எண்ணம் இல்லை என்று அமெரிக்க சனாதிபதி புஷ் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக தென்கொரியாவில் ஓசான் விமான படைத்தளத்தில் அமெரிக்க துருப்புக்கள் மத்தியில் அவர் பேசினார்.

அப்போது அவர் கூறுகையில்; 'ஈராக்கிற்காக அமெரிக்கப் படைகள் அதிக தியாகம் செய்து விட்டதாகவும் எனவே அங்கிருந்து படைகளை திரும்பவும் அழைக்க காலக்கெடுவை நிர்ணயிக்கவேண்டும் என்றும் அமெரிக்காவில் சிலர் வலியுறுத்தி வருகிறார்கள். அவர்கள் கூறுவது போல்படைகளை திரும்பப்பெறக் காலக்கெடு எதையும் நிர்ணயிக்க முடியாது என்றார்.

ஈராக்கில் அமெரிக்கப் படைகளின் பணி இன்னும் முடிவடையவில்லை என்றும் அப்போது அவர் குறிப்பிட்டார்.

ஆசியாவில் ஒரு வாரம் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள புஷ் நேற்று சீனா சென்றார். இன்று மங்கோலியா சென்று பின்னர் தாயகம் திரும்புகிறார். இதற்கிடையே ஈராக்கில் இருந்து படைகளை திருப்பி அழைக்கவேண்டும் என்று கோரி அமெரிக்க பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியின் சார்பில் தீர்மானம் கொண்டு வரப்பட்டது. வாக்கெடுப்பில் இந்தத் தீர்மானம் தோல்வி அடைந்தது குறிப்பிடத்தக்கது. ஈராக்கில் ஒருலட்சத்து 60 ஆயிரம் அமெரிக்க இராணுவ வீரர்கள் உள்ளனர்.




பாகிஸ்தானில் பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் நீண்ட நாட்களுக்கு பின் நிவாரண முகாமில் இருந்து பால்கேட் பகுதியில் உள்ள தங்களது சொந்தக் கிராமத்திற்கு பெட்டி படுக்கையுடன் உழவியந்திரத்தில் திரும்புகின்றனர்.

# இந்தியா–ரஷ்யா இராணுவ ஒப்பந்தம்

(மொஸ்கோ)

இந்திய- ரஷ்ய இராணுவ மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்புத் திட்டத்தின் கீழ் 2010ஆம் ஆண்டு வரை 81 ஆயிரத்து 700 கோடி ரூபாய் மதிப்பில் 200இற்கும் அதிகமான திட்டங்கள் நிறைவேற்றப்படவுள்ளன என்று ரஷ்ய இராணுவ அமைச்சக அதிகாரி தெரிவித்தார்.

இது குறித்து ரஷ்ய இராணுவ அமைச்சக அதிகாரி கூறுகையில், "இராணுவ தொழில்நுட்ப ஒத்துழைப்பு தொடர்பாக இந்தியாவுக்கும் ரஷ்யாவுக்கும் இடையே ஒப்பந்தம் ஏற்பட்டது. இந்தத் திட்டத்தின் கீழ் ஏற்கனவே 38 ஆயிரத்து 700கோடி ரூபாவுக்கு பரிமாற்றங்கள் நடந்துள்ளன. 2010 ஆம் ஆண்டு வரை 81 ஆயிரத்து 700 கோடி ரூபாயில் 200இற்கும் அதிகமான திட்டங்கள் நிறைவேற்றப்படும்'' என்றார்.



அமெரிக்காவில் சார்லெஸ்டோன் பகுதியில் புதிய பாலம் கட்டப்பட்டதைத் தொடர்ந்து பழைய பாலம் கடந்த வாரம் வெடி வைத்து தகர்க்கப்பட்டது.

# இந்தோனேஷிய மதத் தலைவர்கள் தீவிரவாதத்திற்கு எதிராக பிரச்சாரம்

(ஜகார்த்தா)

இந்தோனேஷியாவில் தீவிரவாதத்துக்கு எதிரான பிரச்சாரத்தில் முஸ்லிம் மதத் தலைவர்களும்- உலாமாக்களும் ஈடுபட்டுள்ளனர். இதற்காக அவர்கள் ஒரு சிறப்புக் குழுவை ஏற் படுத்தியுள்ளனர்.

இது குறித்து இந்தோனேஷியாவில் வெளியாகும் கோம்பாஸ் என்ற பத்திரிகையில் வெளியான செய்தியில்.

உலகிலேயே முஸ்லிம் மக்கள் அதிகம் வசிக்கும் நாடு இந்தோனேஷியா. இங்கு ஜெம்மா இஸ்லாமியா என்ற தீவிரவாத அமைப்பு வன்முறையில் ஈடுபட்டு வருகிறது. வெளிநாட்டினர் அதிகம் தங்கியிருக்கும் சுற்றுலா நகரங்களில் இந்த அமைப்பு வெடிகுண்டுத் தாக்குதல்களை நடத்தி வருகிறது. இவர்கள் தங்களின் தீவிரவாத செயல்களுக்கு மதத்தை ஒரு கேடயமாக இதுவரை பயன்படுத்தி வந்தனர்.மேலும் இளைஞர்கள் மற்றும் ஏழை மக்களை தங்களின் செயல்களுக்கு பயன்படுத்தி வருகின்றனர். மதத்தை முன் நிறுத்தி அவர்கள் செயற்பட்டதால் முஸ்லிம் மதத் தலைவர்களும் அவர்களை நேரிடையாகக் கண்டிக்க மறுத்தனர்.

கடந்த மாதம் பாலி நகரில் குண்டு வெடித்து 20 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். இதில் தொடர்புடைய இரண்டு தற்கொலைப் படை தீவிரவாதிகளின் கடைசி பேச்சு வீடியோ நாடாவில் இடம் பெற்றிருந்தது. அந்த வீடியோ நடாவை இந்தோனோஷியாவில் உள்ள முஸ்லிம்மதத் தலைவர்களிடம் பொலிசார் போட்டு காட்டினர். தீவிரவாதிகள் எப்படியெல்லாம் மதத்தை தவறான வழியில் பயன்படுத்துகின்றனர் என்பதை அவர்களுக்கு பொலிசார் விளக்கிக் கூறினர்.

இதையடுத்து முஸ்லிம் மதத் தலைவர்கள் மனம்மாறினர். தீவிரவாதத்துக்கு எதிரான பிரச்சாரத்தில் தற்போது அவர்களும், உலாமாக்களும் ஈடுபட்டு வருகின்றனர். இதற்காக சிறப்புகுழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இஸ்லாம் என்ற பெயரை தீவிரவாதிகள் பயன்படுத்தி வருவது விதிமுறைகளுக்கு எதிரானது. மதத்தின் அடிப்படை கல்விக்கு எதிரானது என முஸ்லிம் இளைஞர்களுக்கும், ஏழை மக்களுக்கும் எடுத்துக் கூறி வருகிறோம் என மதத்தலைவர்கள் கூறியுள்ளனர்.



சீனாசென்றுள்ள அமெரிக்க அதிபர் புஷ் சீன இராணுவத்தினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றார். அருகில் சீன அதிபர்ஹூ ஜின்டாவ்

# பாக்.பூகம்ப நிவாரணத்திற்கு ஆசிய வங்கி ஐயாயிரம் கோடிரூபா வழங்குகிறது

(இஸ்லாமபாத்)

கடந்த மாதம் 8ஆம் திகதி பாகிஸ்தானிலுள்ள காஷ்மீர் பகுதியில் பயங்கர பூகம்பம் ஏற்பட்டு 73ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் இறந்தனர்.

ஐந்து இலட்சம் பேர் வீடுகளை இழந்து தவிக்கிறார்கள். இப்பகுதி நிவாரணத்துக்குரூ.26ஆயிரம் கோடி தேவைப்படும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. பல்வேறு சர்வதேச நாடுகள் நிதியுதவி அளித்து வருகின்றன. பூகம்ப நிவாரண நிதிக்கு உலகநாடுகள் அதிக நிதியுதவி அளிக்க வேண்டுமென ஐ.நா.சபை கோரிக்கைவிடுத்துள்ளது.

இந்தக் கோரிக்கையை அடுத்து ஆசிய உதவிவங்கி ஐயாயிரம் கோடியை வழங்குவதாக அறிவித்தது. இதில் நீண்டகால கடனும் அடங்கும்.

# காஷ்மீர் பிரச்சினைக்கு தீர்வு காண்பதே இந்தியா அளிக்கும் நன்கொடையாக இருக்கும்

*பாக். அதிபர் முஷாரப்*



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானுடன் இணைந்து காஷ்மீர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதே காஷ்மீர் மக்களுக்கு இந்தியா அளிக்கும் நன்கொடையாக இருக்கும் என்று பாகிஸ்தான் அதிபர் முஷாரப் தெரிவித்துள்ளார்.

பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட பாகிஸ்தான் மக்களுக்கு உதவ நிதி திரட்டும் வகையில் இஸ்லாமபாத்தில் நேற்று முன்தினம் நன்கொடையாளர் மாநாடு நடந்தது. இதில் ஐ.நா பொதுச் செயலாளர் கொபி அனான் மற்றும்71 நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். இம்மாநாட்டைத் தொடங்கி வைத்து முஷாரப் பேசுகையில்,

பூகம்பத்தால் பாகிஸ்தான் பேரழிவைச் சந்தித்துள்ளது. பாகிஸ்தானின் மறு சீரமைப்புக்கு உலக நாடுகள் நிதியுதவியளிக்க வேண்டும். பெரும் நாசத்தை ஏற்படுத்தியிருந்தாலும் ஒரு நன்மையையும் பூகம்பம் செய்துள்ளது. நிவாரணப் பணிகளில் இந்தியாவும் பாகிஸ்தானும் இணைந்து பணியாற்ற பூகம்பம் ஒரு வாய்பளித்துள்ளது.

எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டின் இரு பகுதியிலுமுள்ள காஷ்மீர் மக்கள் மட்டுமின்றி இரு நாடுகளைச் சேர்ந்த மக்களும் ஒருங்கிணைந்து செயற்பட வேண்டிய தேவையை பூகம்பம் உருவாக்கியுள்ளது.

காஷ்மீர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதுதான் எல்லைக்கட்டுப்பாட்டுக்கோட்டின் இரு பகுதிகளிலும் பாதிக்கப்பட்ட காஷ்மீர் மக்களுக்கு இந்தியா அளிக்கும் நன்கொடையாக இருக்கும்.

பாகிஸ்தானின் மறுசீரமைப்புக்கு 107 கோடி ரூபாய் நிதியுதவியை இந்தியா ஏற்கனவே அறிவித்துள்ளது. உலக வங்கியும் ஆசிய வளர்ச்சி வங்கியும் இணைந்து 22 ஆயிரத்து 360 கோடி ரூபாய் நிதியுதவி அளிக்க முன்வந்துள்ளன.இம் மாநாட்டில் கலந்து கொள்ள வந்துள்ள இந்திய பிரதிநிதிகளுக்கு நன்றி தெரிவிக்கின்றேன் என்று பேசினார் முஷாரப்.



ரஷ்ய தலைநகர் மொஸ்கோவின்மேற்குப் பகுதியிலுள்ள 25 மாடி கட்டடத்தில் நேற்றுமுன்தினம் தீ விபத்து ஏற்பட்டது. இதில்மூன்று பேர் பலியாகினர். ஐந்து பேர் காயமடைந்தனர். 25 ஆவது மாடியில் பரவிய தீயை அணைக்க தீயணைப்பு படை வீரர்கள் போராடுகின்றனர்.

# மாவீரர் நாளை உணர்வெழுச்சியுடன் கடைப்பிடிக்க பொது மக்கள் ஏற்பாடு

(மல்லாவி)

முல்லைத்தீவு மாவட்ட பாண்டியன்குளம், துணுக்காய் பிரதேசங்களில் மாவீரர் நாள் மிகவும் சிறப்புடன் நடத்துவதற்கு மேற்படி பிரதேச மக்கள் மிகவும் உணர்வு பூர்வமாக முன்னேற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இவ்வகையில் பாண்டியன்குளம் பிரதேசத்திலும், பாலிநகர் பகுதிகளிலும் அலங்கார வளைவுகள் அமைத்து சிவப்பு, மஞ்சள் கொடிகளால் வீதிகளின் இரு மருங்குகளிலும் அலங்கரித்து வருகின்றனர்.

அத்துடன் துணுக்காய் பிரதேசத்தில் மாவீரர்களின் தியாகங்களைச் சித்திரிக்கின்ற அலங்கார வளைவுகள் அமைத்தும் பொது அமைப்புக்கள், அரச, அரசசார்பற்ற நிறுவனங்களில் சிவப்பு, மஞ்சள் கொடிகளால் அலங்கரித்தும் வருகின்றனர்.

அத்துடன் பெய்து வரும் மழையையும் பொருட்படுத்தாது துயிலும் இல்லங்களில் மக்கள் உணர்வு பூர்வமாக சிரமதானப்பணிகளிலும் பங்கு கொண்டு வருகின்றனர். (24)

# தமிழீழக் கடற்படை துணைப்படையின் ஐந்தாவது அணியின் பயிற்சி நிறைவு

தமிழீழக் கடற்படை துணைப்படையின் ஐந்தாவது அணி[illegible]ான பயிற்சி நிறைவு நிகழ்வு நேற்று முன்தினம் காலைஒன்பது மணி[illegible] கடற்புலிகளின் கங்கை அமரன் நினைவுப் பயிற்சிக் கல்லூரி மண்ட[illegible] சிறப்பாக நடைபெற்றது.

கடற்புலிகளின் தளபதிகளில் ஒருவரான வி[illegible]யகம் [illegible] நடைபெற்ற இந்நிகழ்வில் பொதுச் சுடரினை கடற்புலிகளின் சிறப்புத் த[illegible]தி சூசை ஏற்றிவைத்தார், தமிழீழ தேசியக் கொடியினை காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் ஏற்றிவைத்தார். லெப்.கேணல் கங்கைஅமரன் அவர்களின் திருவுருவப் படத்திற்கான ஈகச்சுடரினை கடற்புலிகளின் தளபதிகளில் ஒருவரான பகலவன் ஏற்றிவைத்தார். மலர் மாலையினை ராஜன் பயிற்சி கல்லூரி பொறுப்பாளர் கீதன் அணிவித்தார் தொடர்ந்து சிறப்புரைகளினை பா.நடேசன், கேணல் சூசை ஆகியோர் நிகழ்த்தினர்.

# சுனாமியால் பாதிப்புற்ற பெண்களுக்கு தையல் இயந்திரங்கள் வழங்கல்

(முல்லை)

கள்ளப்பாட்டில் சுனாமியால் பாதிக்கப்பட்ட கிராம பெண்களுக்கு தையல் இயந்திரம் கையளிக்கும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கள்ளப்பாடு பொது நோக்கு மண்டபத்தில் நடைபெற்றது.

"கொலன் ஸ்ரிச்ங்" நிறுவனத்தினரால் 21 பயனாளிகளுக்கு இந்தத் தையல் இயந்திரம் வழங்கப்பட்டது. கள்ளப்பாடு தெற்கு மாதர் சங்கத்தலைவி ம.ஜெனிற் ஜெயராணி தலைமையில் ஆரம்பமான நிகழ்வில் மங்கல விளக்கினை கொலன் ஸ்ரிச்ங் பணிப்பாளர் சி.இந்திரன் அவரது துணைவியார் திருமதி இ.ஜெயபாலினி ஆகியோர் ஏற்றினார்கள்.

தமிழீழ தேசியக்கொடியினை முல்லை.மாவட்ட திட்டமிடல் செயலகப் பொறுப்பாளர் யாழமுதன் ஏற்றினார்.

கருத்துரைகளை சி.இந்திரன், தமிழர் புனர்வாழ்வுக்கழக சுனாமி திட்ட கட்டமைப்புப் பணிப்பாளர் ரெஜி ஆகியோர் வழங்கினார்கள். தொடர்ந்து 21 பயனாளிகளுக்கான தையல் இயந்திரங்களை வருகை தந்திருந்த ஸ்ரிச்ங் நிறுவன பணிப்பாளர், அவரது துணைவியார், தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பணியாளர்கள், பணிப்பாளர்கள் மற்றும் திட்டமிடல் செயலகப்பொறுப்பாளர் ஆகியோர் வழங்கினர். (20)

# பலத்த மழையுடன் மினி சூறாவளி வட்டுவாகல் ஆற்று நீரும் திறப்பு

## -முல்லையில் மக்கள் பாதிப்பு

(முல்லை)

**முல்லையில் நேற்று முன்தினம் பலத்த மழை பெய்ததைத் தொடர்ந்து வட்டுவாகல் ஆற்றுநீர் கடலுக்கு வெட்டி விடப்பட்டது. அத்துடன் மினிசூறாவளி வீசியதால் பொதுமக்கள் பாதிப்புக்குள்ளாகினர்.**

தொடர்மழை காரணமாக நீர் தேங்கி நின்ற வட்டுவாகல் ஆறு நேற்று மக்களால் கடலுக்கு வெட்டிவிடப்பட்டது.

இந்த நீரானது நந்திக்கடல் மற்றும் கள்ளியடிக்குளம் ஆகிய பகுதிகளில் மிக மோசமாக பாதைகளை மூடி பாய்ந்ததுடன் பயிர் அழிவுகளையும் ஏற்படுத்தி வீடுகளுக்குள்ளும் வெள்ளம்தேங்கி நின்றதனால் மக்கள் பெரும் சிரமத்தை எதிர்கொண்டனர்.

இதனைக் கண்ணுற்ற முல்லைத்தீவு பகுதி மக்களும் கடற்புலிகளின் முல்லை.மாவட்ட அரசியல்துறையினரும் இணைந்து வட்டு வாகல் ஆற்றினை கடலுக்குள் வெட்டிவிட்டனர்.

நேற்று முன்தினம் பெய்த பலத்த மழையினால் வட்டுவாகல் பாலத்தின் மேலாக நீர் பாய்ந்ததால் போக்குவரத்து பெரும் சிரமத்தை எதிர்கொண்டிருந்தது. அத்துடன் அன்றையதினம் பிற்பகல் 3.30 மணிக்கு முல்லைத் தீவில் வீசிய மினி சூறாவளியினால் மரங்கள் முறிந்ததுடன், வீடுகளின் தகரங்கள், கூரைகள் என்பன பிடுங்கி எறியப்பட்டன இதன் போது உயிர் சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை. முல்லைத்தீவு நகர்ப்பகுதியிலும் இந்தசம்பவம் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது. (20)

# சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் சூழலைப் பாதுகாக்க கரித்தாஸ் நடவடிக்கை

(மட்டக்களப்பு)

சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் சூழல் பாதுகாக்கும் திட்டம் ஒன்றினை கரித்தாஸ் நிறுவனம் ஆரம்பித்துள்ளது. இதன் மூலம் கரையோரப்பாதுகாப்பினையும் பேண முடியும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

முதற்கட்டமாக சுனாமியால் பாதிக்கப்பட்ட திருச்செந்தூர் கல்லடி, கல்லடி உப்போடை, பூநொச்சி முனை ஆகிய கிராமங்களில் பச்சை மரங்களை நாட்டுவதன் மூலம் சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் சூழலைப் பாதுகாப்பதுடன், கரையோரப் பிரதேசங்களில் கடலரிப்பினையும் தவிர்த்துக்கொள்ள முடியும் என அதன் திட்டப்பணிப்பாளர் மைக்கல் அருளானந்தம் தெரிவித்தார்.

இச்செயல் திட்டமானது மாவட்ட அரச அதிபர், பிரதேச செயலாளர் மற்றும் கிராமசேவகரின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்படுவதாகவும், மட்டு நகர் வனவள பகுதியின் சிபாரிசும், கொழும்பு கரையோர சுற்றாடல் பாதுகாப்பு இலாகாவின் அனுமதியும் பெறப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

மேற்கூறிய கிராமங்களுக்கு முதற்கட்டமாக சவுக்கு மரங்களும் தென்னைமரங்களும் நாட்டப்படுவதாகவும், இவற்றினை பராமரிப்பதற்காக மக்களுக்கு இலவச கருத்தரங்குகளும் நடத்தப்பட்டு கரையோரத்தினை பராமரிப்பதற்கு பராமரிப்பாளர்களும் நியமிக்கப்படுவர்.

# சிறுதானிய பயிர்ச்செய்கைக்கு ஊக்குவிப்பு நடவடிக்கை

(அலுவலக செய்திய[illegible])

சிறுதானியப்பயிர்ச்செய்கையி[illegible] ஈடுபடும் வகையில் விவசாயிகளு[illegible]கு ஊக்குவிப்பு நடவடிக்[illegible] தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் மேற்கொண்டு வருகின்றனர்.

சிறுதானியப் பயிர்ச்செய்கையினை மேற்கொள்ளும் விவசாயி[illegible]ளுக்கு பயிர்ச்செய்கை மேற்கொ[illegible] [illegible]நிம் விளைதிறணத்தைப்பொறுத்து மீளளிப்புக்கடன் [illegible]பட்டு வருவதாகவும். சி[illegible]ப்பயிர்ச் செய்கையினை [illegible]கொள்பவர்கள் அந்தந்த [illegible] பொருண்மி[illegible] மேம்பாட்டுப் பிரதேச இ[illegible]ளருடன் தொடர்பு [illegible] (சோ)

# சுனாமி பாதித்த பகுதிகளில் நகைகளைத் திருடியவர் கைது

(முல்லை)

சுனாமிப்பேரலைகளில் சிக்கி கடந்த வருடம் முல்லைத்தீவில் காணாமல் போன நகைகளின் ஒரு தொகுதியினை களவாடிய நபர் காவல் பணிமனையினரால் கைது செய்யப்பட்டார். இவரிடமிருந்து 23 பவுண்நகை மீட்கப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பாக சட்டநடவடிக்கைக்காக சம்பந்தப்பட்ட சந்தேக நபரினை முல்லை.மாவட்ட நீதிமன்றத்தில் முற்படுத்தியுள்ளதாகவும், தொடர்ந்து விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் முல்லைத்தீவு காவல் பணிமனைப் பொறுப்பாளர் தெரிவித்ததோடு இவ்வாறான பொருட்கள் வைத்திருப்பவர்கள் உடனடியாக முல்லை.காவல்பணிமனையில் அவற்றை ஒப்படைக்குமாறு தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (20)

# ஜெயந்திநகர் பொதுச்சந்தை செயற்படாமையால் வீதியோரம் சுகாதாரமற்ற மீன் வியாபாரம்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி டிப்போவீதி சேவியர் கடைச்சந்திக்கருகாமையில் சுகாதாரத்திற்கு ஒவ்வாத வகையில் மீன் வியாபாரம் நடைபெற்றுவருவதனைக் காணக்கூடியதாகவுள்ளது.

பாதுகாப்பாக அதற்கென ஒரு இடம் அமைக்கப்பெறாமல் வீதி ஓரத்தில் நிலத்தில் வைத்தே மேற்படி மீன் வியாபாரம் இடம்பெற்று வருகின்றது.

கோடை காலத்தில் வெய்யிலும், மழைகாலத்தில் மழைக்குள் நனைந்த வண்ணமும் மேற்படி மீன் வியாபாரிகள் மீன் விற்பனையில் ஈடுபட்டு வருகின்றனர்.

தற்போது மாரிகாலம் ஆகையினால் இதன் காரணமாகத் தொற்று நோய்கள் ஏற்படக்கூடிய ஏதுநிலை தோன்றக் காரணமாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

பாதுகாப்பற்ற நிலையில் சுகாதாரத்திற்கு ஒவ்வாத வகையில் நடைபெற்றுவரும் மேற்படி மீன் வியாபாரத்திற்கு ஏற்ற நடவடிக்கை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகள் முன்வரமாட்டார்களாவென மக்கள் தங்கள் ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள்ளனர்.

இப்பிரதேசத்திற்குரிய பொதுச் சந்தை ஜெயந்திநகரில் அமைக்கப்பட்டுள்ள பொழுதிலும் தற்போது இயங்காதுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# ஜே.ஆர்.எஸ். நிறுவனத்தின் வெள்ளிவிழா நிகழ்வு

(முல்லை)

ஜே.ஆர்.எஸ் நிறுவனத்தின் வெள்ளிவிழா நிகழ்வு சிலாவத்தை ஜே.ஆர்.எஸ் தையல் பயிற்சி நிலையத்தில் கடந்தவாரம் தையல் பயிற்சி ஆசிரியர் தலைமையில் இடம்பெற்றது. மங்கல விளக்கினை முல்லைப் பங்குத்தந்தை ஜேம்ஸ் பத்திநாதர் அடிகளார் ஏற்றினார். தமிழீழத் தேசியக் கொடியினை மாவீரர் கப்டன் திலீபனாவின் சகோதரி ச.சகீலா ஏற்றினார்.

தொடர்ந்து ஆசியுரையினையும், ஆசிச்செய்தியினையும் ஜேம்ஸ் பத்திநாதர் அடிகளார் நிகழ்த்தினார். கருத்துரையினைத் தொடர்ந்து சிறப்புக்கலைநிகழ்வுகள் நடைபெற்றன. இந்த நிகழ்வில் தையல்பயிற்சி மாணவர்கள், பொதுமக்கள் எனப்பலர் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (20)

# ரூ.2 இலட்சம் பெறுமதியான வலம்புரிச்சங்கு

(மன்னார்)

மன்னார் எரிக்கலம்பிட்டியில் மீனவர் ஒருவர் இரண்டு இலட்சம் பெறுமதியான வலம்புரிச் சங்கு ஒன்றை எடுத்துள்ளார்.இது வழமைக்கு மாறாக நல்ல தூய வெண்மையாக காட்சியளிக்கிறது.

இரவில் புதிய ஒரு வகை இசை கேட்பதாகவும் அங்குள்ள மக்கள் அறிந்து அங்கு சென்று பார்வையிட்டார்கள். நேற்று முன்தினம் இரண்டு இலட்சம் ரூபாவிற்கு இச்சங்கு விற்பனை செய்யப்பட்டது. (18)

# கழுத்தில் வெட்டுக்காயங்களுடன் சங்க காவலாளி சடலமாக மீட்பு

(முல்லை)

முல்லை.மாவட்ட பாண்டியன்குளம் பிரதேசத்தில் ப.நோ.கூ.ச. கிளையில் காவலாளி கழுத்தில் வெட்டுக் காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டார்.

மேற்படி சம்பவத்தில் பாலசிங்கம் பிரேமநாதன் (அப்பன் வயது-31 இலக்கம் 206, எட்டாம் வாய்க்கால் பாண்டியன்குளம்) என்ற காவலாளியே கழுத்தில் வெட்டுக் காயங்களுடன் நேற்று முன்தினம் காலை எட்டு மணிக்கு அயலவர்களினால் சடலமாக மீட்கப்பட்டார்.

இது சம்பந்தமாக துணுக்காய் காவல்பணிமனையினர் சம்பவம் நடந்த இடத்திற்கு விரைந்து துரித விசாரணையை மேற்கொண்டு சடலத்தை கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் பிரேதபரிசோதனைக்காக அனுப்பிவைத்தனர். (24)

# 50 வீட்டுத்திட்டத்திற்கு தலைமன்னாரில் அடிக்கல் நாட்டல்

(மன்னார்)

மன்னார் யேசு சபை அகதிகள் நிறுவன நிலையத்தால் தலைமன்னார் கிராமத்தில் 50 வீட்டுத்திட்டத்திற்கான அடிக்கல்நாட்டுவிழா கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. இந்த அடிக்கல் நாட்டு விழாவில் மன்னார் ஆயர் இராஜப்பு ஜோசப் ஆண்டகை, மன்னார் பிரதேச செயலர் சமூகம் கொடுத்து காலை பத்து மணியளவில் அடிக்கல் நாட்டினர். 50 வீடுகளும் தலா இடண்டரை இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்படவுள்ளது. (18)

# பால் கொள்வனவிற்கு ஏற்பாடு

(முல்லை)

முள்ளியவளைப் பிரதேசத்திற்குட்பட்ட கால்நடை வளர்ப்போரின் நன்மை கருதி தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிலையத்தினரால் பால் கொள்வனவு செய்யப்படவுள்ளது என முள்ளியவளைப் பிரதேச தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன இணைப்பாளர் தெரிவித்தார்.

இத்திட்டம் வெகுவிரைவில் செயற்படவுள்ளதால் கால்நடை வளர்ப்போர் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன முள்ளியவளைப் பிரதேச செயலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (20)

# தமிழீழ மாவீரர் நாள் – 2005

## மாவீரர் தம் ஈகமும், வீரமும் என்றுமே போற்றத்தக்கவை



தமது இன்னுயிரை ஈந்த விடுதலைப் போருக்கு வீறுசேர்த்த மாவீரர்கள் அவர்களின் தலைமுறையிலேயே போற்றப்படவேண்டும். அவர்களின் வீரங்களும், ஈகங்களும், அருஞ்செயல்களும் மக்களிடம் எடுத்துச் சொல்லப்பட வேண்டும். அந்த மாவீரர்களின் பெற்றோர்களும், குடும்பத்தினரும் அவலப்படக் கூடாது என்ற நோக்கின் அடிப்படையில் எமது தலைவரின் எண்ணத்திலிருந்து உருவானது தான் தமிழீழ மாவீரர்நாள்.

தமிழீழ விடுதலைப் போருக்கு இன்னுயிரை ஈந்த உரமாகிப்போன மாவீரர்களின் எண்ணிக்கை பத்துநூறு என்ற நிலை மாறி ஆயிரக்கணக்காக உயர்ந்து விட்ட நிலையில் ஒவ்வொரு மாவீரரையும் தனித்தனியாக ஆண்டு தோறும் அவரவர் நினைவு நாட்களில் நினைவுகூர இயலாது என்ற நிலையில் அனைவரையும் ஒரே நாளில் நினைவு கூரத்தக்கதாக தமிழீழ விடுதலைப் போரில் முதற் களச் சாவடைந்த இயக்க வீரன் லெப். சங்கரின் (சத்தியநாதன்) நினைவுநாளான நவம்பர் 27ஆம் நாளைப் பொதுவான நாளாகத் தேர்ந்தெடுத்த எமதுதலைவர் 1989ஆம் ஆண்டில் தமிழீழ மாவீரர் நாளை அறிவித்தார்.

விடுதலைப் போராட்டத்தில் உலகம் வியக்கும் வகையிலே புதிய வரலாறு படைத்து புதுமை சேர்த்து நிற்கும் எமது தேசியத் தலைவர் மேதகு.வே.பிரபாகரன் அவர்கள் மண்மீட்புப் போரிலே பல வெற்றிகளைக் குவித்துவரும் அதேநேரம், நாட்டை எல்லாத் துறைகளிலும் கட்டியெழுப்புவதற்கான திட்டங்களைத் தீட்டி வழிகாட்டி இயங்கி வருவ தோடு, தூய்மையான தேசிய விடுதலைப் போரை வீறோடு நடாத்தி வீரச்சாவைத் தழுவிய மாவீரர்களைப் போற்றி நினைவில் நிறுத்தவும், அவர்களது பெற்றோரும், குடும்பத்தினரும் அல்லலுறும் நிலையை மாற்றவுமெனப் பல்வேறு திட்டங்களைத் தீட்டி செயற்படுத்தி வருகின்றார்.

தமிழீழ மாவீரர் பணிமனை

## புற்றுநோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு காப்பகம்

புலம் பெயர்ந்து வாழும் ஈழத்தமிழ் மக்களின் நிதி உதவியுடன் உடுவில் மருதனார் மடத்தில் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட நோயாளர்களுக்கான காப்பகம் ஒன்று நிறுவப்பட்டு இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. இக்காப்பகம் இம்மாத இறுதியில் திறக்கப்படவிருப்பதாகவும் இக்காப்பகத்தில் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட நோயாளர்களைப் பராமரிப்பதுடன் அவர்களுக்கான மருத்துவத் தேவைகளையும் சேவை மனப் பான்மையுடன் மேற்கொள்ள இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதனை புலம் பெயர் ஈழத்தமிழர்களின் மருத்துவ நிறுவனமான கேன் மேற்கொண்டுள்ளது. (28)

## பருத்தித்துறையில் படையினர் பொதுமக்களைத் தடுத்து விசாரணை

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை செல்லும் வழியில் உள்ள முள்ளிபடையினரின் தடைநிலையத்திற்கு அருகே சிறிலங்கா புலனாய்வுத் துறையினரால் பொதுமக்கள் தடுக்கப்பட்டு விசாரணைகள் இடம்பெற்ற வருவதாகவும், வாகன இலக்கங்கள் இரகசியமாகப் பதிவு செய்யப்பட்டு வருவதாகவும் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். மற்றும் வடமராட்சி பிரதேசத்தில் படை புலனாய்வுத்துறையினரால் தொடர்ந்தும் பலர் அச்சுறுத்தப்பட்டு வருவதுடன் கொலை மிரட்டல்களும் விடுக்கப்பட்டு வருவதாக தெரிய வருகிறது. (28)

## யாழ்.நகரப் பகுதிகளில் கழிவுநீர் தேக்கம் இலையான், நுளம்புகளின் பெருக்கம் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரப் பகுதியில் உள்ள கழிவு நீர் வாய்க்கால்கள் பல குப்பை கூளங்களால் சூழப்பட்டு கழிவுநீர்கள் அப்படியே தேங்கிவிடுவதால் யாழ். நகரப்பகுதி புறநகர்ப்பகுதி எங்கும் தற்பொழுது இலையான், நுளம்பு பெருக்கம் அதிகரித்திருப்பதுடன் பெரும் சுகாதார சீர்கேடுகள் ஏற்பட்டிருப்பதாக பொதுமக்கள் மாநகர சபையிடம் முறையிட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. பல இடங்களில் கழிவு நீர் கால்வாய்கள் பல வருடங்களாக துப்புரவு செய்யப்படாமல் உள்ளதாகவும் இதனால் கழிவுநீர்கள் அப்படியே தேங்கி. சுற்றுச் சூழலை மாசுபடுத்தி வருவதாகவும் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். (28)

## சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வெண்புறா நிறுவனம் உதவி

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அடிப்படை மனிதாபிமான பணிகளை வெண்புறா நிறுவனம் யாழ்.குடாநாட்டில் மேற்கொண்டு வருவதாக இந்த நிறுவனத்தின் பிரதிநிதி தெரிவித்துள்ளார். சின்னக்கொலனி தீருவில் பகுதியில் தற்காலிக இடைத்தங்கல் முகாம்களை இந்த நிறுவனம் அமைத்துக் கொடுத்து இருப்பதுடன் முன்பள்ளிச் சிறுவர் கழகங்களைப் புனரமைத்து சத்துணவு வழங்கல், உடல் ஆளுமையை மாணவர்களிடையே ஏற்படுத்தல் போன்ற திட்டங்களைச் சுனாமி அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் இந்த நிறுவனம் மேற்கொண்டுவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (28)

## புதிய பட்டதாரி ஆசிரியர்களுக்கான வாண்மைத்துவ செயலமர்வு

புதிதாக நியமனம் பெற்ற பட்டதாரி ஆசிரியர்களுக்கான வாண்மைத்துவ செயலமர்வு டிசம்பர் மாதம் பத்தாம் திகதி சனிக்கிழமை யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெற இருப்பதாக கல்லூரியின் உபபீடாதிபதி பா.தனபாலன் தெரிவித்துள்ளார். புதிதாக நிய மனம் பெற்ற ஆசிரியர்கள் தமது விண்ணப்பங்களை எதிர்வரும் 25ஆம் திகதிக்கு முன்னர் யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரிக்கு அனுப்பி வைக்கும்படி கோரப்பட்டுள்ளது. (28)

## பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில் பல்துறை சார்ந்த சிகிச்சைப் பிரிவு

(பருத்தித்துறை)

வடமாராட்சி பருத்தித்துறை அரசினர் ஆதாரவைத்தியசாலையில் மிகநீண்ட இடைவெளிக்குப் பின்னர் பல்துறைசார்ந்த புதிய சிகிச்சைப் பிரிவுகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருவதாக மாவட்ட வைத்திய அதிகாரியும் வைத்தியசாலைப் பொறுப்பதிகாரியுமான சி.கதிரவேல் பிள்ளை தெரிவித்தார்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் பணியாற்றும் சக வைத்திய நிபுணர்கள் சுழற்சிமுறையில் இவ் வைத்தியசாலைக்கு வருகைதந்து கிளினிக்குகளையும், சத்திரசிகிச்சைகளையும் நடத்தி வருகின்றனர்.

சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர் ரவிராஜ் பிரதி திங்கள், புதன்,வெள்ளி கிழமைகளிலும், கண் வைத்திய நிபுணர் டாக்டர் எஸ்.குகதாசன் பிரதி புதன் கிழமைகளிலும் கிளினிக்குகளையும், சத்திரசிகிச்சைகளையும் நடத்திவருகின்றனர்.

பொது வைத்தியநிபுணர் வைத்தியர் திருமதி நாகேந்திரா பிரதி புதன், வெள்ளிக்கிழமைகளிலும், மனநோய் வைத்திய நிபுணர் வைத்தியர் பிரதி வெள்ளிக்கிழமை கிளினிக்குகளையும் நடத்திவருகின்றார்கள்.

மாதத்தில் இரண்டு தடவைகள் மார்புநோய் சிகிச்சைகளையும், தொண்டை, காது,மூக்கு தொடர்பான சிகிச்சைகளையும், வைத்தியர் முகுந்தனும், வைத்தியர் திருமதி. முகுந்தனும் இருதயம் தொடர்பான சிகிச்சைகளை வைத்திய நிபுணர் சற்குணம் மாதம் ஒரு தடவை மேற்கொண்டு வருகிறர்கள் (ஞ)

## 66 இலட்சத்து 19 ஆயிரம் செலவில் வலி. கிழக்கில் புனரமைப்புப் பணி

வலி. கிழக்கு பிரதேச சபையால் வலி கிழக்கு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் ரூபா 66 இலட்சத்து 19 ஆயிரம் செலவில் புனரமைப்புப் பணிகளை இந்த ஆண்டு முன்னெடுக்க இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. பிரதேசசபை நிதியில் இருந்தும் புனர்வாழ்வு நிதியில் இருந்தும் இவ்வேலைத்திட்டங்களை முன்னெடுக்க இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (28)

## நிரந்தர வீடுகளை அமைத்து தருமாறு மணற்காடு கிராம மக்கள் கோரிக்கை

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டு தற்காலிக இடைத்தங்கல் முகாம்களில் தங்கியுள்ள மணற்காடு கிராமத்தைச் சேர்ந்த இருநூறுக்கும் மேற்பட்ட மக்கள் தமக்கு உடனடியாக நிரந்தர வீடுகளை அமைத்துத் தரும்படி யாழ். அரசாங்க அதிபரிடம் கோரிக்கை ஒன்றை விடுத்திருப்பதாக தெரியவருகிறது. மணற்காடு கிராம பொது அமைப்பான ஊரக வளர்ச்சி பேரவையே தமது கிராம மக்களின் அவலநிலை தொடர்பாகவும், மாணவர்களின் கல்வி வசதியின்மை சமூக சீர்கேடுகளையும் சுட்டிக்காட்டி இந்தக் கோரிக்கையை யாழ். அரச அதிபரின் கவனத்திற்கு இக்கிராம மக்கள் கொண்டு சென்றிருப்பதாகத் தெரிய வருகிறது. (28)

## மன்னார் பேசாலையில் காற்றுடன் கடும் மழை

(மன்னார்)

. மன்னார், பேசாலை, தலைமன்னார் போன்ற கடற்கரையில் நேற்று பெரும் கடலலைகள் ஏற்பட்டதாகவும் மக்கள் இதனால் அச்சம் கொண்டு தொழிலுக்குச் செல்லாமல் இருப்பதாகவும் தகவல் கிடைக்கின்றன.

அங்கு காற்றுடன் மழை பெய்துகொண்டிருப்பதாகவும் இதனால் மக்கள் பாதுகாப்பான இடங்களை நோக்கி செல்வதாகவும் அறியப்படுகிறது.

## சமுர்த்தி நிவாரண முத்திரை வழங்குவதில் முறைகேடு

### யாழ். அரச அதிபருக்கு முறைப்பாடு

சமுர்த்தி நிவாரண முத்திரை விநியோகத்தில் யாழ். குடாநாட்டில் முறைகேடுகள் பல இடம்பெற்று வருவதாக பொதுமக்கள் பலரிடம் இருந்து யாழ். அரசாங்க அதிபருக்கு முறைப்பாடுகள் கிடைத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. பல இடங்களில் நல்ல வசதிபடைத்த பலருக்கு நிவாரண முத்திரைகள் அதிகாரிகளினால் வழங்கப்பட்டு இருப்பதாகவும் ஆனால் வசதியற்ற பல ஏழைக் குடும்பங்களுக்கு சமுர்த்தி முத்திரை வழங்கப்படவில்லை என்றும் இந்தப் பாகுபாடு குறித்து யாழ். அரச அதிபர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (28)

## யாழ்.குடா நாட்டுக்கான தேர்தல் செலவு ஒருகோடி 60இலட்சம்


நடந்து முடிந்த சனாதிபதித்தேர்தலுக்கென யாழ்.குடாநாட்டில் மட்டும் தேர்தல் செலவாக ஒருகோடியே அறுபது லட்சம் ரூபாய்நிதிகள் செலவுசெய்யப்பட்டிருப்பதாக யாழ்.செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. வாக்கு பெட்டிகளை விமானங்களில் கொண்டுவந்தது முதல் கொத்தணி வாக்குச் சாவடிகளை அமைத்தது வரை இந்நிதி செலவிடப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(28)

# யதார்த்தத்தை புரிந்து கொள்ளாத.....

மகிந்த ஹந்தக்க (லங்காதீப)
தமிழில் வடிவேல்

"சாதாரண காற்றை விதைத்து புயற்காற்றை அறுவடை செய்தல்" என்று ஆங்கிலப் பழமொழி ஒன்றில் கூறப்படுகிறது. அதன் மூலம் கூடாத மிகச் சிறு தீமையை செய்து பெரும் தீமையை அடைதல்



என்பது தெளிவாகிறது. தேர்தல் மேடைகளில் அநேகமான அரசியல்வாதிகள் வெளியிட்ட அபிப்பிராயங்களும் கருத்துக்களும் சிலவேளை மேற்குறிப்பிட்ட சாதாரண காற்றுக்கு உதாரணமாகக் கூறலாம். தேர்தல் மேடைகளில் எழுப்பிய அவ்வாறான காற்றின் மூலம் பெறப்பட்ட வெற்றியின் பின்னர் அந்தத் தலைவர் நிச்சயமாக அரசியல் சூறாவளிக்கு முகம் கொடுக்க நேரிடலாம். இந்த சூறாவளியை தவிர்க்க வேண்டுமாயின் அதனைப் போன்ற நாசகார அதிகாரத்தைக் கைவிட வேண்டும். சிறிலங்காவில் அண்மைக காலமாகவே இந்த அதிகாரம் இருந்து வருகின்றது. அது கடந்த 19 ஆம் திகதி தற்போதைய சனாதிபதியாகப் பதவியேற்ற மகிந்த ராஜபக்ஷவையும் தொடரப்போகின்றது.

சிறிலங்காவில் தேர்தல் பரப்புரை சமயத்தில் அளிக்கப்படும் வாக்குறுதிகள் தேர்தலுக்காகவே அளிக்கப்படும் வாக்குறுதிகள் என்பதால் அதனை பதவிக்கு வந்தவுடன் நிறைவேற்றுவது சுலபமாக இருக்க முடியாது. ஒரு நிறைவேற்றதிகாரம் கொண்ட சனாதிபதியாயினும் மக்களின் வாக்குச் சீட்டின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட அவர் தனது அரசியல் நோக்கங்களைக் கொண்டு செல்ல முடியாது. நிறைவேற்று அதிகாரம் அதற்கு ஒரு அணிகலனாகாது. அதனால் தனக்கு அளிக்கப்பட்ட வாய்ப்பை நிலைநிறுத்த அவர் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவது முக்கியமான ஏதுநிலையாகும். எனினும் தற்போது தேர்தல் மேடைகளில் கூறப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றுவது மிகச் சுலபமானதாகக் கருத முடியாது. தற்போதைய அரசியல் யதார்த்தத்தை ஏற்றுக் கொள்ளும் அதேவேளை தனது நேர்மைத் தன்மை பிரச்சினைக்குள்ளாகாமல் பார்த்துக் கொள்ளும் தந்திரோபாயத்தை புதிய தலைவர் கைக்கொள்ள வேண்டும். ஒரு தலைவருக்கு அரசியல் தந்திரோபாயம் முக்கியமானதாயினும் அது தனது நேர்மைக்கு இடையூறு விளைவிக்காமல் இருப்பது நல்லது. அரசியல் தந்திரோபாயம் நேர்மைக்கு இடையூறாகும்போது அது பல பிரச்சினைகளை உருவாக்கலாம். தனது நேர்மைக்கு குந்தகம் ஏற்படும் வகையில் செயற்படும் ஒரு தலைவர் ஒரு சனநாயக நாட்டில் நீண்டநாள் அரசியலில் தாக்குப் பிடிக்க முடியாது.

தற்போது சிறிலங்கா அரசியலில் அதிகமாகப் பேசப்படுவது அரசியல் வாதிகளின் ஊழல் மோசடி பற்றிய விவகாரமாகும். தேர்தல் காலத்தில் ஒருவர் தனது எதிராளிமீது சுமத்திவரும் ஊழல் மோசடி குற்றச்சாட்டுக்களை எழுத்து மூல ஆதாரங்களுடன் முன்வைப்பார். அவை ஊழல் மோசடி ஆணைக்குழுவிடம் செய்த முறைப்பாட்டின் தகவலாகவும் இருக்கும். ஊடகங்களில் வெளியானதாகவுமிருக்கும். எனினும் அரை நூற்றாண்டுகாலமாக சிறிலங்காவில் அவ்வாறான குற்றச்சாட்டுக்கள் தேர்தல் காலங்களில் மட்டுமே சுட்டிக் காட்டப்பட்டு வருகின்றது. அவையே வேட்பாளர்களினதும் ஆதரவாளர்களதும் சுலோகங்களாகி விடுகின்றன. அவ்வாறின்றி ஊழல் மோசடிகளைத் தவிர்க்க நேர்மையுடன் அரசியல் நடத்துவது முக்கிய பணியாகும். எதிர்க்கட்சி மீது இவ்வாறான குற்றச் சாட்டுக்களை வைக்கும் ஒருவர் அதன் பின்னராவது அதாவது தான் பதவிக்கு வந்த பின்னர் இவ்வாறான ஊழல் மோசடிகள் இல்லாது பாதுகாத்துக் கொள்வது முக்கியமாகும். திறந்த பொருளாதாரக் கொள்கையின் கீழ் அனைத்துத் துறைகளிலும் இவ்வாறான மோசடிகளில் ஈடுபடும் அரசியல்வாதிகளை இனம் கண்டு கொள்ள வேண்டும். ஒருவர் மற்றவரின் ஊழல் மோசடிகளை ஆராய்வதற்கும் அதனை வெளிப்படுத்துவதற்கும் காரணம் தனது மோசடிகள் அம்பலமாகாமல் தடுப்பதற்காகும்.

இந்த அரசியல்வாதிகளின் மோசடிகள் இலங்கையில் மட்டுமன்றி உலகில் ஏனைய நாடுகளிலும் சாதாரணமாகக் காணப்படும் ஒன்றாகும். அண்மையில் இந்திய அரசாங்கத்திலும் இச்செயல் நடைபெற்றதும் அதில் தொடர்புள்ள அரசியல்வாதி ஒருவர் பதவி விலகியதும் தெரிந்ததே.



எனினும் இலங்கையில் அரை நூற்றாண்டு காலமாக இது நடைபெற்று வந்த போதும அதனை சட்ட ரீதியாகத் தடுக்க எவரும் முன்வரவில்லை என்றே கூறலாம். எனினும் 1956 ஆம் ஆண்டில் பண்டாரநாயக்க அரசு காலத்தில் அமைக்கப்பட்ட "வோல்டர் தலகொடபிட்டிய" ஆணைக்குழு மட்டுமே இவற்றில் இருந்து வேறுபடுகின்றது. அப்போது ஊழல் மோசடியில் ஈடுபட்ட அமைச்சர்கள் பாராளுமன்ற உறுப்பினர் ஆகியோருக்கு தண்டனை வழங்கப்பட்டது. ஆயினும் அதன் பின்னர் அவ்வாறு அமைச்சர்களுக்கோ எம்.பிக்களுக்கோ தண்டனை அளிக்கப்படவில்லை. அதிலிருந்து தெரிய வருவது ஒரு அமைச்சரோ எம்.பியோ ஊழல் மோசடியில் ஈடுபடவில்லை என்பதல்ல. அது அவ்வாறான ஒருவருக்கு தண்டனை பெற்றுக் கொடுப்பதில் அக்கறையில்லை என்பதாகும்.

ஆனால் தற்போது பதவியேற்றுள்ள சனாதிபதி தொடர்பில் மக்கள் வைத்துள்ள நம்பிக்கைக்கு மாசு ஏற்படாத வண்ணம் செயற்படுவதற்கும் இந்தக் கறையைப் போக்குவதற்கும் அவர் திட்டமிடல் வேண்டும். எனினும் அதுவும் சுலபமானதாக இருக்க முடியாது.

அடுத்ததாக புதிய சனாதிபதிக்கு முகம் கொடுக்க வேண்டியிருக்கும் பிரதான சவாலாக இருப்பது இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வு காண்பதாகும்.

இந்நாட்டில் 1956 ஆம் ஆண்டு முதல் இனப்பிரச்சினை தலைதூக்கியுள்ளது. அது அனைத்து தேர்தல் சமயத்திலும் முன்னுரிமை பெற்று வந்துள்ளது. எனினும் அதற்கு முற்றுப் புள்ளி வைக்க எந்த தலைவரும் முன்வரவில்லை என்றே கூறலாம். ஆனால் அதற்கு தூபமிட்டவர்களே அதிகமாயினர். அதனால் ஏற்பட்ட விளைவு பல மடங்காயின. இனப்பிரச்சினை சிக்கல் நிலைக்குள்ளாகி அது பெரும் யுத்தம் வரை பரிணமித்துள்ளது. இதனால் இனங்களுக்கிடையிலான புரிந்துணர்வு அந்நியோன்யம் சிதறடிக்கப்பட்டுள்ளது. ஒருபுறத்தில அது வல்லரசுகளின் ஆதரவை அல்லது நல்லெண்ணத்தை வெற்றிகொள்ள வேண்டிய நிலைக்கு சிறிலங்காவைத் தள்ளி விட்டுள்ளது. இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டி அரசியல் மேடையில் அடிக்கடி குரல் எழுப்பப் பட்டபோதும் அது தற்போதைய அரசியல் யதார்த்த நிலைக்கு பொருத்தமானதாகக் கருதப்படவில்லை.

சுமார் மூன்று வருடமாக கடைப்பிடிக்கப்பட்டுவரும் புரிந்துணர்வு ஒப்பந்தம் நிரந்தர சமாதானத்துக்கோ உயிரிழப்புக்களைத் தவிர்ப்பதற்கோ போதுமானதாகவில்லை. இதன் மூலம் தமிழர்களின அபிலாஷைகளோ உரிமைகளோ பெற்றுக் கொடுக்கப்படவில்லை.

பௌதிக ரீதியாகவும் இனரீதியாகவும் பிரிந்து போகும் தறுவாயிலிருக்கும் சிறிலங்காவைப் பாதுகாக்க வேண்டுமாயின் அது தொடர்பில் பிரதான பங்குவகிக்கும் விடுதலைப் புலிகளிடமும் ஏனைய கட்சிகளிடமும் பேச்சுவார்த்தை நடத்தப்பட வேண்டும் அதன்மூலம் ஒரு இணக்கப்பாட்டை எட்ட வேண்டும் அவ்வாறின்றி வேறு எவ்வகையான ஒப்பந்தமோ புரிந்துணர்வோ சாத்தியமாகாது என்பது வரலாற்றுச் சான்றாகும். நிரந்தரத் தீர்வுக்கு மூல காரணமாக அமைவது அனைத்து சமூகங்களினதும் இணக்கப்பாடாகும் அது தனியான அரசியல் வாதியினது இணக்கப்பாடாக இருக்க முடியாது. தனிப்பட்ட வெற்றியாகவும் இருக்காது. உண்மையான வெற்றியென்பது அனைத்துப் பிரிவினரதும் ஈடுபாடும் விட்டுக் கொடுப்பும் ஆகும். அதாவது அடுத்தவரின் இயல்பு வாழ்வுக்கு மதிப்பளிப்பதும் ஒத்துப் போவதுமாகும்.

எனினும் அண்மையில் நடைபெற்ற தேர்தல் பரப்புரையின்போது இவற்றைக் காணமுடியாதுவிட்டது. அதாவது அதிகாரத்தைக் கைப்பற்றுவதை நோக்கமாகக் கொண்டு ஏனைய சிறுபான்மைச் சமூகத்தை புறந்தள்ளியதாகும். அவர்களின் அரசியல் பொருளியல் சமூக வளங்களை கருத்தில் கொள்ளாது இரு பிரதான கட்சிகளும் செயற்பட்டன. சிறுபான்மை அரசியல்வாதிகளை சமமாக மதிக்கத் தவறினர். இது வழமையான செயற்பாடாகவே இருந்து வருகிறது.

உண்மையில் யுத்தத்துக்குக் காரணமாக அமைந்தவை அவர்களின் கருத்துக்கு மதிப்பளிக்காமை சம அந்தஸ்து வழங்காமை போன்ற சனநாயக கட்டமைப்புகள் சிங்கள அரசியல்வாதிகளிடம் இல்லாதிருப்பதாகும். இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும்போது முக்கியமாக கருத்திற் கொள்ளப்பட வேண்டியது. ஒற்றையாட்சியின் கீழானதா அல்லது சமஷ்டித் தீர்வா என்பதல்ல. தனிமனிதனிடமும் சமூகத்திடமும் சனநாயகத்தை ஏற்படுத்திக் கொள்ளும் வாய்ப்பு அவர்களின் கருத்துக்கும் முடிவுக்கும் மதிப்பளித்தல் வேறுபாடு காட்டாமை என்பவற்றின் மூலமே புதிய தலைவர் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும்.




# 10.11.2005 – 16.11.2005

## 10

☐ ஈராக் தலைநகர் பாக்தாத்தில் விடுதி ஒன்றில் இரு தீவிரவாதிகள் நடத்திய தற்கொலைத்தாக்குதலில் ஏழு பொலிசார் உட்பட 33 பேர் பலி, 19 பேர் காயம்.

☐ தென் கிழக்காசியப்பகுதிகளில் நடந்த பல்வேறு குண்டு வெடிப்புச் சம்பவங்களுக்குக் காரணமான தீவிரவாதி அசாரிபின் ஹுசேன் இந்தோனேஷியப் பொலிசாருடன் நடந்த சண்டையில் பலி.

☐ ஜோர்டான் தலைநகர் அம்மானிலுள்ள மூன்று நடசத்திர விடுதிகளில் நடந்த தற்கொலைப் படைத்தாக்குதல்களில் 60 இற்கும் மேற்பட்டோர் பலி, 300 இற்கும் மேற்பட்டோர் படுகாயம் இச்சம்பவம் தொடர்பாக 120 பேர் ஜோர்தானிய பொலிசாரால் கைது.

## 11

☐ ஆப்கானிஸ்தானின் கேக்ஷாஹுதான் கிராமப்பகுதியில் இலுயுசின் 1 எல்-76 என்ற ரஷ்யாவின் சரக்கு விமானம் மலைப்பகுதி ஒன்றில் விபத்துக்குள்ளாகி விழுந்து நொருங்கியதில் பத்துப்பேர் பலி.

☐ பிலிப்பைன்ஸ்சின் இராணுவத்துக்கும் அல்ஹைதாவுடன் தொடர்புடைய தீவிரவாதிகளுக்குமிடையில் தென் தீவான சோலோ வில் கடும் துப்பாக்கிச்சமர் இடம்பெற்றதில் 26 பேர் பலி.

☐ ஆப்கானிஸ்தானில் துணை ஆளுநர் தலிபான் தீவிரவாதிகளால் சுட்டுக்கொலை.

☐ ஐ.நா.செயலாளர் நாயகம் கொபி அனான் ஈராக்கிற்கான திடீர் விஜயமொன்றை மேற்கொண்டார்.

☐ ஈராக் தலைநகர் பாக்தாத்தில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் ஐந்து பேர் பலி. 20 பேர் காயம்.

☐நியூசிலாந்தின் விரைவுபோர்க்கப்பலான என்.எம்.என்.சற்வெலிங்டனா நீண்டநாள் பாவனையின் காரணமாக தலைநகர் வெலிங்டன் கடற்கரை அருகே குண்டுவைத்து தகர்க்கப்பட்டது.



☐ பீகாரில் ரகனாபாத் மாவட்டத்தில் சிறைச்சாலை மீது தீவிரவாதிகள் திடீர்தாக்குதல் நடத்தி சிறையிலிருந்த மாவோயிஸ்ட் இயக்கத்தலைவர் அஜேய் கானுவை மீட்டுச் சென்றுள்ளதுடன் அங்கிருந்த 300இற்கும் மேற்பட்ட கைதிகளும் தப்பிச்சென்றனர்.

## 14

☐ பிரான்ஸ் அரசாங்கம் பிரகடனம் செய்த அவசரகால நிலைமையை மேலும் மூன்று மாதங்களுக்கு நீடிப்பதற்கான பிரேரணையை அங்கீகரித்தது.

☐வியன்னாவில் வரலாற்றுப் புகழ்படைத்த ஹோல்பேர்க் மாளிகையில் மூன்றுநாள் இஸ்லாமிய மாநாடு ஆரம்பமானது.

☐ சீனாவின் மேற்கு ஷேங்ஸி மாகாணத்திலுள்ள குய்னியோன் எனுமிடத்தில் பாடசாலை சென்றுகொண்டிருந்த சீனசிறுவர்களையும், ஆசிரியர்களையும் டிரக் ஒன்று மோதியதில் பத்துப்பேர் பலி, 30 பேர் காயம்.

☐ சிரிய எல்லைக்கருகிலுள்ள மேற்கு ஈராககில் அல்ஹைதா தீவிரவாதிகளின் இலக்குகள் மீது அமெரிக்க விமானப்படை விமானங்கள் குண்டுத்தாக்குதல்களை மேற்கொண்டன. இதில் 37 தீவிரவாதிகள் பலி, 25 பேர் கைது.

ஈராக்கின் மேற்குப் பகுதியான மீதியில் பாதையோரக்குண்டொன்று வெடித்துச்சிதறியதில் ஆறு பேர் பலி, 30 பேர் காயம்.

## 15

☐ ஜப்பானில் கடலுக்கடியில் பூகம்பம் ஏற்பட்டது. இது ரிச்டர் அளவுகோலில் 6.9 புள்ளியாகப் பதிவானது. இதனால் நூற்றுக் கணக்கான மக்கள் வேறு இடங்களுக்கு இடம்பெயர்வு.

☐ வடமேற்கு மெக்சிக்கோவில் நகோலஸ் நகருக்கருகே அமோனியம் குளோரைட் வாயு நிரம்பிய கொள்கலன் வாகனமொன்று எதிரே வந்த பேருந்தில் மோதி புரண்டு கவிழ்ந்ததில் விஷவாயுக்குள் சிக்கி 38 பேர் பலி, பலர் மூச்சுத்திணறல் ஏற்பட்டதன் காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

☐பாகிஸ்தானின் கராச்சி நகரிலுள்ள பாஸ்ட்புட் விடுதி அருகே நிறுத்தப்பட்டிருந்த காரிலிருந்த சக்தி வாய்ந்த குண்டு வெடித்ததில் ஆறு பேர் பலி யானார்கள், 50 காயம்.



## 16

☐ இந்தியாவின் ஆளுகைக்குட்பட்ட காஷ்மீரின் தலைநகரான சிறிநகரில் வங்கியின் தலைமை அலுவலகத்திற்கு வெளியே இடம்பெற்ற கார்க்குண்டு வெடிப்பில் மூன்று பேர் பலி.

☐ ஆப்கானிஸ்தானின் கந்தகாரில் சனநெரிசல் மிகுந்த சந்தைப்பகுதியில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் பலர் பலி.

☐ தமிழகப்பெண்கள் சம்பந்தமாக பிரச்சினைக்குரிய கருத்துத் தெரிவித்ததாகத் தொடரப்பட்ட வழக்கில் மேட்டூரிலுள்ள நீதிமன்றத்தில் நடிகை குஷ்பு சரண்.



☐ தாய்லாந்தின் தெற்கிலுள்ள கிராமத்தில் முஸ்லிம் பிரிவினை வாதிகள் மேற்கொண்ட தாக்குதலில் ஒன்பது பேர் பலி, பலர் காயம்.

# மகிந்தவுக்கு அளிக்கப்பட்ட வாக்குகள் யுத்தத்திற்கு அளிக்கப்பட்டவையாகும்!

**-ஐ.தே.க.பிரதிச் செயலர் திஸ்ஸஅத்தநாயக்க**

(கொழும்பு)

சிறிலங்கா சனாதிபதித்தேர்தலில் மகிந்தராஜபக்ஷவுக்கு மக்கள் வாக்களித்துள்ளதன் மூலம் யுத்தத்துக்கு வாக்களித்துள்ளனர் என்று ஐக்கிய தேசியக்கட்சியின் பிரதிச் செயலாளர் திஸ்ஸஅத்தநாயக்க கூறியுள்ளார்.

இது தொடர்பில் திஸ்ஸ அத்தநாயக்க கூறியுள்ளதாவது;

கடந்த 2002ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக்கட்சி ஏற்படுத்திய யுத்த நிறுத்த ஒப்பந்தம் மூலம் இந்த நாடு வெடிகுண்டுகளிலிருந்தும் வீதித்தடைகளிலிருந்தும் விடுவிக்கப்பட்டது. மக்கள் அச்சமின்றி வாழும் சூழல் உருவாக்கப்பட்டது.

தென்னிலங்கை மக்களும் விடுதலைப்புலிகளின் பிரதேச மக்களும் கடந்த 20 ஆண்டுகாலமாக இங்கே ஒரு யுத்தம் நடந்தது என்பதை மறந்து விட்டார்கள்.

யுத்தநிறுத்த ஒப்பந்தத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் என்று ஜே.வி.பி, ஜாதிகஹெல உறுமயவினருக்கு மகிந்தராஜபக்ஷ உறுதியளித்துள்ளார். யுத்தநிறுத்த ஒப்பந்தம் திருத்தப்பட்டால் போரைத்தொடங்குவோம் என்று விடுதலைப்புலிகள் எச்சரித்துள்ளனர் என்றார் திஸ்ஸஅத்தநாயக்க.

# இனரீதியாகப் பிளவுபட்ட தேர்தல் முடிவு இதுவாகும்

**-கொழும்பு பல்கலைக்கழகப் பேராசிரியர்**

(கொழும்பு)

இனரீதியாகப் பிளவுபட்ட தேர்தல் முடிவு இதுவாகும் என தெளிவுபடுத்தப்பட்டுள்ளதாக கொழும்பு பல்கலைக்கழகப் பேராசிரியர் கீத.பொன்கலன் தெரிவித்துள்ளார்.

சிறிய அளவு வாக்குகள் வித்தியாசத்தில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ வெற்றி பெற்றுள்ள இந்தத் தேர்தல் முடிவுகளின் தாக்கம் குறித்துக் கொழும்பு பல்கலைக்கழகப் பேராசிரியர் தெரிவிக்கையில்;

இனரீதியாக மிகவும் பிளவுபட்ட ஒரு தேர்தல் முடிவு என்று இதனைக் கூறலாம். இந்தத் தேர்தல் முடிவானது சமாதான முயற்சிகளில் ஆக்கபூர்வமான ஒரு தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை என்பது துரதிர்ஷ்டவசமான நிலை.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் உடனடியாக மீண்டும் ஆரம்பிக்கப்படுவதற்கான அரசியல் சூழ்நிலைகள் இப்போது காணப்படவில்லை. சமாதான முயற்சிகள் மீண்டும் ஆரம்பிப்பது நீண்ட நாளைக்கு தாமதப்படுமானால் மீண்டும் மோதல் நிலை ஏற்படும் ஆபத்து உருவாகக்கூடும் என்று அவர் தெரிவித்தார்.

# ஆறுமுகம், ஹக்கீம் விரும்பினால் அரசில் இணையலாம்

**-மங்கள சமரவீர அழைப்பு**

(கொழும்பு)

சிறிலங்காவில் புதிதாக அமைக்கப்படவுள்ள அரசில் பிரதமரையும், அமைச்சரவையையும் சனாதிபதி மகிந்த ராஜபக்ஷவே நியமனம் செய்வார். எனவே அது தொடர்பாக எதுவித ஆருடமும் கூற முடியாது என்று தெரிவித்திருக்கும் முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர, ஆறுமுகம் தொண்டமானும், ரவூப்ஹக்கிமும் மகிந்தவின் சிந்தனைகளை ஏற்றால் அவர்களை எமது அரசில் இணைத்துக் கொள்ளவும் தயார் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

தேர்தலில் வெற்றி பெற்று சனாதிபதிப் பதவியை மகிந்த ராஜபக்ஷ ஏற்றுக் கொண்ட பின்னர் அவரது வெற்றிக்கு ஒத்துழைப்பை வழங்கிய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சியினருக்கும், வாக்களித்த மற்றும் வாக்களிக்காத மக்களுக்கும், அமைப்புகளுக்கும் ஊடகங்களுக்கும் நன்றி தெரிவிக்கும் முகமாக கொழும்பு கலதாரி நட்சத்திர விடுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்து வெளியிடுகையிலேயே மங்கள சமரவீர இவ்வாறு தெரிவித்துள்ளார்.

# தேர்தல் வன்முறைகள் தொடர்பான முறைப்பாட்டு விசாரணைகள் விரைவில்!

**-சிறிலங்காப் பொலிஸ்தரப்புக் கூறுகிறது**

(கொழும்பு)

தேர்தல் வன்முறை தொடர்பாக செய்யப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பான விசாரணைகள் விரைவில் ஆரம்பிக்கப்படுமென சிறிலங்காப் பொலிசார் தெரிவிக்கின்றனர். சனாதிபதித் தேர்தலுக்கு முன்னரும், பின்னரும் பல்வேறு வன்முறைச் சம்பவங்கள் பதிவுசெய்யப்பட்டிருப்பதாகவும், இந்த முறைப்பாடுகள் குறித்த விசாரணைகளை பக்கச்சார்பற்றமுறையில் மேற்கொள்ளப்படுமெனவும் பொலிஸ் தேர்தல் செயலகத்தின் உயர் அதிகாரிபொருவர் கூறினார். அரசாங்கச் சொத்துக்கள் சட்டவிரோதமாகத் தேர்தல் நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்பட்டிருந்தால் அது குறித்தும் விசாரணைகள் நடாத்தப்படுமென அவர் தெரிவித்தார். இதுவரை கிடைக்கப்பட்ட முறைப்பாடுகளில் 25வீதமானவை விசாரிக்கப்பட்டுவிட்டதெனச் சுட்டிக்காட்டிய அந்த பொலிஸ் உயர் அதிகாரி, தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் மற்றும் அரசாங்கச் சொத்துக்கள் சட்டவிரோதமாகப் பயன்படுத்தப்பட்டமை குறித்த விசாரணைகளை நிறுத்துமாறு தமக்கு எந்தவிதமான அழுத்தங்களும் கொடுக்கப்படவில்லையெனவும் கூறினார்.

# சமாதான முயற்சிகள் மகிந்தவால் முன்னெடுக்கப்படும்

**-ஜப்பான் நம்பிக்கை**

இலங்கையில் சமாதான முயற்சிகள் புதிய சனாதிபதியால் முன்னெடுக்கப்படுமென ஜப்பான் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

புதிய சனாதிபதியாக மகிந்த ராஜபக்ஷ தெரிவுசெய்யப்பட்டமைக்கு வரவேற்புத் தெரிவித்துள்ள ஜப்பானிய அரசாங்கம், நடந்து முடிந்த தேர்தல் வன்முறைகள் இன்றி நடந்தமையையும் பாராட்டியுள்ளது.

இந்த நிலையில் புதிய சனாதிபதி சமாதானத்தை உரிய வகையில் முன்னெடுக்கவே[illegible]மென ஜப்பான் கோரியுள்ளது.

# மகிந்தவின் இடத்திற்கு நிருபமா ராஜபக்ஷ

சிறிலங்கா சனாதிபதியாக மகிந்தராஜபக்ஷ பொறுப்பேற்றுள்ளதையடுத்து அவரது பாராளுமன்ற இடத்துக்கு உறவினரான நிருபாமாராஜபக்ஷ தெரிவாகக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2004ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் போட்டியிட்டுத் தோல்வியடைந்தவர் நிருபாமாராஜபக்ஷ, முல்கிரிகல பாராளுமன்றத்தொகுதியில் இரண்டு முறை தேர்வு செய்யப்பட்டவர்.

லக்ஷ்மன் கதிர்காமர் கொல்லப்பட்டதையடுத்து ஏற்பட்டுள்ள இடத்துக்கு வடக்கு-கிழக்கு ஆளுநர் டிரோண்ட் பெர்னாண்டோ தேசியப்பட்டியலினூடாகப் பரிந்துரைக்கப்படலாம் என்றும் கூறப்படுகின்றது.

# மலிக்சமரவிக்கிரம பதவி விலகல்

(கொழும்பு)

ஐக்கியதேசியக்கட்சியின் தவிசாளர் மலிக்சமரவிக்கிரம தனது பதவி விலகல் கடிதத்தை நேற்று முன்தினம் ஐக்கியதேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளித்துள்ளார்.

அவர் அதன் பிரதியை ஐ.தே.கட்சியின் பிரதித்தலைவர் கருஜெயசூரியவிடமும் கையளித்ததுடன் எதிர்வரும் 30ஆம் திகதியிலிருந்து தனது கடமைகளை நிறுத்தவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# பெரும்பான்மை மக்களின் விருப்புக்கு மாறாக மகிந்த ராஜபக்ஷ செயற்படமாட்டார்

## - ஹெலஉறுமய நம்பிக்கை

(கொழும்பு)

சனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பெரும்பான்மை மக்களின் விருப்பங்களுக்கு மாறாகச் செயற்படமாட்டாரென ஜாதிக ஹெல உறுமய நம்பிக்கை வெளியிட்டுள்ளது. பெரும்பான்மை மற்றும் சிறுபான்மை மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்கும் சனாதிபதி நடவடிக்கை எடுப்பாரென ஜாதிக ஹெல உறுமயவின் உறுப்பினரும் முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபருமான கொட்டகதெனிய கூறினார்.

சிங்களவர், தமிழர், முஸ்லிம் மற்றும் பறங்கியர் என்ற பிரிவினையை ஏற்படுத்த தாம் முயற்சிக்கவில்லையெனவும், சனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தேர்தல் பிரச்சாரங்களில் இலங்கையர்கள் என்ற நிலைப்பாட்டிலேயே பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபட்டுவந்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

அதிகாரப் பகிர்வானது பிரதேச மட்டத்திலேயே இடம்பெறவேண்டுமெனச் சுட்டிக்காட்டியுள்ள கொட்டகதெனியா, ஒரு சமூகத்தை மாத்திரம் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் அதிகாரப் பகிர்வினை ஏற்படுத்துவது முறையற்றதெனவும் கூறினார்.

# சிறைச்சாலைகளின் பாதுகாப்பை அதிகரிக்க நடவடிக்கை

சிறிலங்காவின் சிறைச்சாலைகளின் பாதுகாப்பை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்காக புதிய காவலர்களை நியமிக்க சிறைச்சாலை திணைக்களம் தீர்மானித்துள்ளது.

சிறைச்சாலைகள் திணைக்களத்தில் பல பணி வெற்றிடங்கள் நிலவுவதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் ரூமி மர்ஹூக் தெரிவித்தார். நாடளாவிய ரீதியில் சிறைச்சாலைகளில் சிறைக்காவலர்களுக்கான வெற்றிடங்கள் நிலவுவதாகவும் இந்த வெற்றிடங்கள் குறித்த பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.சிறைக்கைதிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப சிறைக் காவலர்களின் தொகை காணப்படவில்லை என்றும் ரூமி மர்ஹூக் சுட்டிக்காட்டினார். (32)

# ராஜபக்ஷவின் செயலாளராக லலித் வீரதுங்க நியமனம்

சனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் செயலாளராக லலித்வீரதுங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

பிரதமரின் பதில் செயலாளராகப் பணியாற்றிய லலித் வீரதுங்க கடந்த வருடம் ஏப்ரல் மாதம் முதல் இதுவரை பிரதமரின் செயலாளராக பணியாற்றினார். வர்த்தகம், முகாமைத்துவம் தொடர்பான முதுகலைமாணிப் பட்டம் மற்றும் விஞ்ஞானப்பட்டங்களையும் பெற்றுள்ள வீரதுங்க பாங்கொங் தொழிலாளர் அமைப்பு மற்றும் மாலைதீவு ஐக்கியதேசிய அமைப்பு என்பவற்றில் ஆலோசகராகவும் முன்னர் பணியாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 10 - 06 - 1939 | 22 - 10 - 2005 |



## திருமதி இலட்சுமி ஞானசேகரம்

அன்பின் பிறப்பிடமாய் ஆதரவு காட்டிய
அம்மாவின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ரவி இல்லம்,
முரசுமோட்டை. (6935)

தகவல்:-
**குடும்பத்தினர்.**

# 5ஆம் ஆண்டு நிறைவின் நினைவில்

| தாயின்மடியில் முத்தாக | தாயக மடியில் வித்தாக |
|---|---|
| 08 - 12 - 1979 | 21 - 11 - 2000 |



## கப்டன் சரவணன் [பெருமாள் சூரியமூர்த்தி]

**உழவன் ஊர், தருமபுரம்**

**மன்னார் 11ஆம் கட்டைப் பகுதியில் இராணுவத்துடனான மோதலில்**

மண்ணுயிர் மீட்க
தன் உயிர் ஈந்த மாவீரனே
ஆண்டு ஐந்து ஆனாலும்
ஆறாது ஐயா எம் துயரம்

என்றும் உன் நினைவுகளுடன்
**குடும்பத்தினர், மற்றும் உறவுகள்.**

3/3, உழவனூர்,
தருமபுரம் (6933)

# மனிதவள மேம்பாட்டுப் பகுதி
# கணக்கியல் பயிற்சி நெறிக்கான வேண்டுகை

**பின்வரும் தகைமையுடைய ஆண், பெண் இருபாலாரிடமிருந்து கணக்கியல் பயிற்சி நெறிக்கான வேண்டுகை கோரப்படுகின்றது.**

**தகைமைகள்:-**

01. கல்வித் தகைமை:- க.பொ.த.சாதாரண தரத்தில் தமிழ், கணிதப் பாடங்களில் சித்தியடைந்தவராக இருத்தல் வேண்டும்.
02. அகவை:-16 தொடக்கம் 21வரை.

**குறிப்பு:-**

01. வேண்டுகை முடிவு நாள் :-30.11.2005
02. நேர்காணல் நடைபெறும் நாள் :-03.12.2005 காலை 09.00மணி.
03. நேர் காணல் நடைபெறும் இடம்:- மனிதவள மேம்பாட்டுப் பகுதி,
**நாகதம்பிரான் வீதி,**
**ஆனந்தபுரம்,**
**கிளிநொச்சி.**
04. நேர்முகத் தேர்வுக்கு வருகை தருவோர் கல்வித்தகைமைச் சான்றிதழ்கள், பிறப்புச்சான்றிதழ், வதிவிடச்சான்றிதழ், அடையாள அட்டை, ஏனைய சான்றிதழ்கள் ஆகியவற்றின் படிகளுடன் வருகை தருக.
05. பயிற்சிக் காலத்தில் தங்குமிடம், உணவு, கல்விச் செலவு வசதிகள் வழங்குவதோடு, உதவு தொகையும் வழங்கப்படும்.
06. விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:-

**பொறுப்பாளர்,**
**மனிதவள மேம்பாட்டுப்பகுதி,**
**நாகதம்பிரான் வீதி,**
**ஆனந்தபுரம்,**
**கிளிநொச்சி.**

07. பயிற்சியின் நிறைவில் தகைமைச் சான்றிதழுடன் பொருத்தமான பணியும் வழங்கப்படும்.

**ஆளுகை,**
**மனிதவள மேம்பாட்டுப்பகுதி,**
**நிதித்துறை.**

(சி-13343)

# Vacancy Announcement
# Secretary

The International Committee of the Red Cross, Kilinochchi Subdelegation, is seeking for a dedicated **female professional** willing to assume responsibilities as a **Secretary** for the Administration Department.

The candidate should have the following **qualifications:**

* Completion of 'A' Level Education. Higher (university) degree preferred
* Excellent computer - literacy
* Excellent spoken and written English and Tamil
* Working Experience with an international organization and \ or in a secretarial position
* Professional qualification in secretariat

**Core responsibilities** include:

* Drafting of external correspondence in Tamil \ English
* Reception and handling of internal \ outgoing correspondence
* Filing of institutional documents
* Preparation of accommodation arrangements for incoming visitors
* Conduct welcome - briefing for arriving visitors \ expatriates
* Assume team - leader responsibilities for a team of 6 house - maids

**Employment Conditions:**

According to ICRC's National Scale and employment conditions

We encourage suitable candidates to sent their complete CVs to ICRC's office in Kilinochchi before **Friday, 25th November 2005**. Qualified candidates will be contacted for interviews.

**INTERNATIONAL COMMITTEE OF THE RED CROSS**
Subdelegation Kilinochchi
Iranaimadhu Junction
Kilinochchi
Phone: 071-2375697 \ 071-2295680

(சி-13352)

# இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு
## பெருந்தெருக்கள் அமைச்சு
## வீதி அபிவிருத்தி அதிகாரசபை

# கேள்வி கோரல்

(STAART) கீழான சர்வதேச ஒத்துழைப்பிற்கான ஜப்பான் வங்கியின் (JBIC)நிதி வழங்கல்கள்

**உள்ளூர் போட்டிக்குரிய கேள்வி கோரல்கள்**

1. ஒட்டுசுட்டான் -நெடுங்கேணி வீதி மீள் நிர்மாணம் [0.0 - 3.0 KM]
2. ஒட்டுசுட்டான் -நெடுங்கேணி வீதி மீள் நிர்மாணம் [3.0 - 7.0 KM]
3. ஒட்டுசுட்டான் -நெடுங்கேணி வீதி மீள் நிர்மாணம் [7.0 - 10.86 KM]
4. வற்றாப்பளை பிரதான வீதியின் புனர்நிர்மாணம் [0.0 - 3.62 KM]
5. பள்ளிக்குடா செட்டியார் தரை வெளி மீள் குடியேற்ற கிராம வீதிகளின் செப்பனிடல் [0.8 - 3.8 KM]
6. செட்டியார் தரை வெளி மீள் குடியேற்ற வீதி செப்பனிடல் [0.0 - 4.0 KM]
   (நாவற்குழி - கேரதீவு - மன்னார் பிரதானவீதியிலிருந்து)
7. கல்லாறு - சுண்டிக்குளம் வீதி செப்பனிடல் [0.0 - 2.0 KM]
8. கல்லாறு - சுண்டிக்குளம் வீதி செப்பனிடல் [2.0 - 4.0 KM]
9. தர்மபுரம் - கல்லாறு - சுண்டிக்குளம் மற்றும் பெப்பரபிட்டிக்கான வீதி செப்பனிடல் [0.0 - 6.0 KM]
10. தர்மபுரம் - கல்லாறு - சுண்டிக்குளம் மற்றும் பெப்பரபிட்டிக்கான வீதி செப்பனிடல் [6.0 - 9.0 KM].
11. தர்மபுரம் - கல்லாறு - சுண்டிக்குளம் மற்றும் பெப்பரபிட்டிக்கான வீதி செப்பனிடல் [9.0 - 11.5 KM]..

01. பொதுமுகாமையாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை (RDA) மேற்குறிப்பிட்ட வீதிகளை மீள் கட்டுமானம் செய்வதற்கான மூடிய கேள்விப்பத்திரங்களை வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கேள்விச் சபையின் சார்பாக பெற்றுக்கொள்வார்.கேள்விப்பத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும் நடைமுறை 14.12.2005 அன்று பிற்பகல் 2.00 மணியுடன் முடிவடையும். கேள்விப்பத்திரங்கள் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் மாகாணப்பணிப்பாளர் வடக்கு/கிழக்கு (வடக்கு) அவர்களின் வவுனியா காரியாலயத்தில் கிடைக்கும் கேள்விப்படிவங்களில் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படல்வேண்டும். கேள்விப்பத்திரஆவணங்கள் 21.11.2005 தொடக்கம் 12.12.2005 வரையான காலப்பகுதியில் மீளளிக்கமுடியாத கேள்விப் பத்திர கட்டணமான ரூபா 1725/= (பெறுமதி சேர்வரிஉள்ளடங்கலாக) செலுத்தி பெற்றுக் கொள்ளவேண்டும்.

02. நிறைவேற்றும் நிறுவனம் வீதி அபிவிருத்தி அதிகாரசபையாகும்.

03. தகுதிவாய்ந்த கூறுவிலை கோருபவர்கள் பின்வரும் தகைமைப் பிரமாணங்களிற்கு இணங்குதல் வேண்டும்.

   அ) கேள்வி கோரலிற்கு விண்ணப்பிப்பவர் தன்னை இக்ராட் (ICTAD) நிறுவனத்தில் வீதி நிர்மாணத்துறையில் தரம் M-5 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் பதிவு செய்திருத்தல் வேண்டும்.

   ஆ) கேள்வி கோரலிற்கு விண்ணப்பிப்பவர் இலங்கை தேசிய நிர்மாண சங்கத்தில் (NCASL) செல்லுபடியான ஒழுங்கான உறுப்புரிமையை கேள்வி கோரல் படிவம் பெற்றுக் கொள்ளும் பொழுதும் ஒப்பந்தத்தை வழங்கும் பொழுதும் கொண்டிருத்தல் வேண்டும்.

04. கேள்விப்பத்திர ஆவணங்களை எதுவித கட்டணமுமின்றி வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் மாகாணப்பணிப்பாளர் வடக்கு/கிழக்கு (வடக்கு) அவர்களின் கண்டிவீதி வவுனியா, அலுவலகத்தில் பார்வையிடலாம்.

05. கேள்விப்பத்திர ஆவணங்கள் கேள்வி கோரல் முடிவுறும் திகதியிலிருந்து 120 கலண்டர் நாட்கள் வரை செல்லுபடியாகும்.

06. கேள்விப் பாதுகாப்புக் கட்டணத்தொகையான ரூபா இரண்டுலட்சம் (200,000/=) பெறுமதிக்குரிய பத்திரங்கள் கேள்விப்பத்திர ஆவணத்துடன் இணைத்து சமர்ப்பித்தல் வேண்டும். செல்லுபடியாகக்கூடிய பாதுகாப்பு பணப்பத்திரங்கள் இணைக்கப்படாத கேள்விப்பத்திர ஆவணங்கள் நிராகரிக்கப்படும்.

07. முன்கேள்வி கோரல் கூட்டம் 25.11.2005 அன்று காலை 10.00 மணிக்கு மாகாணப் பணிப்பாளர், வடக்கு/கிழக்கு (வடக்கு), அவர்களின் கண்டிவீதி வவுனியாஅலுவலகத்தில் நடைபெறும்

08. மூடி ஒட்டப்பட்ட கேள்விப்பத்திர ஆவணங்களின் இருபிரதிகள் பொதுமுகாமையாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை ,முதலாவது மாடி "செத்சிறிபாய", பத்தரமுல்ல அலுவலகத்திற்கு பதிவுத்தபாலிலோ, அல்லது நேரடியாகவோ முடிவுறும் நேரத்திற்கு முன்பாக சேர்ப்பிக்கப்படல்வேண்டும்.

09. பெற்றுகொள்ளப்படும் கேள்விப்பத்திர ஆவணங்கள் மேலேகுறிப்பிட்ட முடிவுறும் நேரத்தின் பின் உடனடியாக பொதுமுகாமையாளர் வீதி அபிவிருத்தி அதிகாரசபை ,முதலாவது மாடி "செத்சிறிபாய",பத்தரமுல்ல அலுவலகத்தில் திறந்துபார்க்கப்படும்.கேள்விகோரல் கோருபவர்கள் அல்லது அவர்களது அதிகார பூர்வ பிரதிநிதிகள் கேள்விப்பத்திரம் திறக்கப்படும் குறித்தநேரத்தில் பிரசன்னமாக இருக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

10. மேலதிக விபரங்களிற்கு தயவுசெய்து மாகாணப்பணிப்பாளர், வடக்கு/ கிழக்கு (வடக்கு) வீதி அபிவிருத்தி அதிகாரசபை வவுனியா, தொலைபேசி இலக்கம் 024-222 2826 - 024-2220679 தொலைநகல் இலக்கம் 024-2222826, பிரதான பொறியியலாளர் வீதி அபிவிருத்தி அதிகார சபை,155ஆம் கட்டை, கண்டிவீதி கிளிநொச்சி தொலைபேசி இலக்கம் 021 2285724 என்பவர்களுடன் தொடர்பு கொள்ளவும்.

ஆர்.டபிள்யு.ஆர். பேமசிறி
பொது[illegible]காமையாளர்,
வீதி[illegible]தி அதிகாரசபை. (சி-13359)

**எந்திரி மோசஸ் மரியதாசன்,**
**மாகாணப்பணிப்பாளர் வ/கி(வ)**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை.**
**கண்டிவீதி, வவுனியா.**

# காங்கிரஸ் தலைவர்கள் எதற்கும் லாயக்கில்லாதவர்கள்

**- கருணாகரன்**

(திருவனந்தபுரம்)

காங்கிரஸ் தலைவர்கள் எதற்கும் லாயக்கில்லை என்று முன்னாள் கேரள முதல்வர் கருணாகரன் கூறியுள்ளார்.

கேரள முன்னாள் முதல்வரும் ஜனநாயக இந்திரா காங்கிரஸ் கட்சி தலைவருமான கருணாகரன் தன்து கட்சியின் சார்பில் முன்னாள் பிரதமர் இந்திரா காந்தியின் பிறந்த நாளை திருவனந்தபுரத்தில் நேற்று முந்தினம் கொண்டாடினார். இந்த விழாவில் முன்னாள் அமைச்சர் டி.எம்.ஜேக்கப், சுகதன் உட்பட திரளான கட்சித் தொண்டர்கள் கலந்து கொண்டனர்.

விழாவுக்குபின் கருணாகரன் நிருபர்களிடம் கூறியதாவது:-

திருவனந்தபுரம் தொகுதி இடைத்தேர்தலில் இடது முன்னணி வேட்பாளர் ரவீந்திரன்வெற்றி பெறுவது உறுதி. அவரை நாங்கள் வெற்றி பெற வைப்போம். வருங்காலத்தில் ஜனநாயக இந்திரா காங்கிரஸ் கட்சியின் தயவில்லாமல் யாராலும் கேரளாவில் ஆட்சியமைக்க முடியாது. நாங்கள் யார் என்பதை விரைவில் புரியவைப்போம். சோனியாவுக்கு பாடம் புகட்டுவோம்.

இந்த தேர்தலில் பாரதிய ஜனதா தனது வாக்குக்களை காங்கிரசுக்கு விற்பனை செய்துள்ளது. காங்கிரசுக்கு இந்தத் தேர்தல் முடிவு தக்க பாடமாக அமையும். காங்கிரஸ் கட்சிக்கு இப்போது மக்களின் ஆதரவு துளியும் இல்லை. இவர்கள் எதற்கும் லாயக்கில்லை. உருப்படமாட்டார்கள்.

இந்தியாவை முன்னேற்றபாதைக்கு அழைத்துச்செல்ல இப்போதுள்ள காங்கிரஸ் கட்சியாலோ அதன் தலைமையாலோ முடியாது. இந்திரா காந்தி உயிருடன் இருக்கும்போது அவரை எதிர்த்தவர்கள் இப்போது காங்கிரஸ் கட்சிக்கு துதிபாடிக்கொண்டிருக்கிறார்கள் எனத் தெரிவித்தார்.



2004ஆம் ஆண்டுக்கான இந்திராகாந்தி அமைதிவிருது பெற்ற தாய்லாந்து இளவரசி மகாசக்ரி சிரிந்தோனுக்கு பிரதமர் மன்மோகன் சிங் கைகுலுக்கி பாராட்டுத் தெரிவிக்கிறார் அருகில் காங்கிரஸ் தலைவி சோனியா காந்தி.

# குளிர்கால கூட்டத்தொடரை கையாள்வது குறித்து பா.ஜ.க. தலைவர் ஆலோசனை

(டில்லி)

நாடாளுமன்றத்தில் குளிர்கால கூட்டத்தொடரின்போது பின்பற்ற வேண்டிய யுக்திகள் குறித்து பா.ஜ.க. மூத்த தலைவர்களின் ஆலோசனைக்கூட்டம் டில்லியில் நேற்று முந்தினம் நடைபெற்றது.

வாஜ்பாய் இல்லத்தில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் ஈராக் விவகாரம் வோல்கர் அறிக்கை ஆகிய விவகாரங்களை எப்படிக்கையாள்வது என்பது பற்றி ஆலோசிக்கப்பட்டதுமாநிலங்களவை எதிர்க்கட்சித்தலைவர் ஜஸ்வந்த் சிங், மக்களவை எதிர்க்கட்சித் துணைத்தலைவர் வி.கே. மல்ஹோத்ரா உள்ளிட்ட பலர் இதில் பங்கேற்றனர்.

கூட்டத்தின் முடிவில் வெளியே வந்த ஜஸ்வந்த் சிங்கிடம், என்னென்ன விடயங்கள் ஆலோசிக்கப்பட்டன என நிருபர்கள் கேட்டனர். அதற்கு அவர் சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த பல பிரச்சினைகளில், நாடாளுமன்றத்தில் எவ்விதம் நடந்து கொள்வது என ஆலோசிக்கப்பட்டது என்றார்.

-கொலைக்குற்றச்சாட்டு-

# காங்கிரஸ் உறுப்பினர் டில்லியில் கைது

கொலை வழக்குத் தொடர்பாக மேற்கு வங்கத்தைச்சேர்ந்த காங்கிரஸ் எம். பியை டில்லிப் பொலிசார் கைது செய்தனர். மேற்குவங்க மாநிலம் முர்ஷிதாபாத்திலுள்ள பெர்ஹாம்பூர் லோக்சபா தொகுதியைச் சேர்ந்த காங்கிரஸ் எம்.பி. அதிர் சவுத்ரி. முர்ஷிதாபாத் மாவட்ட காங்கிரஸ் தலைவராகவுமுள்ளார். பெர்ஹாம்பூரில் சாலையோர உணவகம் நடத்தி வந்த ஹனீப் ஷேக் என்பவரும் அவரது மகனும் கடந்த ஜூலை மாதம் கொல்லப்பட்டனர்.

இந்தக் கொலைகளில் அதிர் சவுத்ரி மீதும் அவரது மனைவி அர்பிதா மீதும் குற்றம் சாட்டப்பட்டது. இந்த வழக்கில் அதிர் சவுத்ரிக்கு எதிராக பிணையில் வெளிவர முடியாத இரண்டு கைது உத்தரவுகளை கடந்த மாதம் 18ஆம் திகதி பிறப்பிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து அதிர்சவுத்ரி தலைமறைவானார்.

தெற்கு டில்லியிலுள்ள தனது வீட்டில் அதிர் சவுத்ரி நேற்று முன்தினம் தங்கியிருந்தபோது அவரை பொலிசார் கைது செய்து, சாணாக்கியபுரி பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச்சென்று பின்னர், நீதிமன்றில் ஆஜர்படுத்தினர். அதிர்சவுத்ரியைகாவலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.



இரட்டை கொலை வழக்கில் காங்கிரஸ் எம்.பி அதிர்சவுத்ரி கைது செய்யப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கொல்கத்தாவில் அந்த கட்சித் தொண்டர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர்.



இந்திய அணியின் ஆட்டத்தை பார்க்க சின்னசாமி மைதானம் வந்த இந்தப் பெரிய வருகத உற்சாகம் தாளவில்லை இளம் ரசிகர்களைப் போல தனது நெற்றியிலும் இந்தியக் கொடியை வரைந்து கொள்ள தொடங்கி விட்டார். கடவுள் பக்தி, தேச பக்தி இரண்டையும் எப்படி ஒன்றாக வெளிப்படுத்திக் காட்டி இருக்கிறார் பாருங்கள்...!

# மே.தீவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட்
# அவுஸ்திரேலியாவின் வெற்றி இலக்கு 78





அவுஸ்திரேலியாவின் கோபாட்டில் நடைபெற்றுவரும் மேற்கிந்தியத்தீவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் அவுஸ்திரேலியா வெற்றி பெற 78 ஓட்டம் என்ற வெற்றி இலக்கை மேற்கிந்தியத் தீவு நிர்ணயித்துள்ளது.

போட்டியின் நான்காம் நாளான நேற்று 82 ஓட்டங்களுக்கு நான்கு விக்கெட்டுக்கள் என்ற நிலையில் தடுப்பாடிய மேற்கிந்தியத் தீவு பிறைவோவின் சதம், ராம் டீனின் அரைச்சதம் என்பவற்றின் மூலம் 334 ஓட்டங்களைக் குவித்து அவுஸ்திரேலியாவின் வெற்றியை தாமதப்படுத்தினர்.

பிறைவோ 113 ஓட்டங்களையும் ராம்டீன் 71,லாறா 45 ஓட்டங்களையும் அதிகப்பட்சமாக பெற்றனர்.பந்து வீச்சில் வோன் நான்கு விக்கெட்டுக்களையும் மெக்ராத் பிரெட்லீ, மெக்கில் தலா இரண்டு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.மேற்கிந்தியத் தீவு முதல் இனிங்ஸ் 149 ஓட்டம், இரண்டாவது இனிங்ஸ் 334 ஓட்டம். அவுஸ்திரேலியா முதல் இனிங்ஸ் 406 ஓட்டம் இன்று போட்டியின் இறுதி நாள்.

# மாவீரர் வெற்றிக்கிண்ண கால்பந்துப் போட்டி
## முல்லை. மாவட்டத்துக்கான போட்டி ஆரம்பம்

முல்லை. மாவட்ட தமிழீழ விளையாட்டுத் துறையினரால் மாவீரர்நாள் 2005 ஆம் ஆண்டுக்கான கால்பந்தாட்ட வெற்றிக் கேடயங்களுக்கான சுற்றுப் போட்டிகள் இன்று முதல் பிரதேச ரீதியாக விலகல் முறையில் நடைபெறவுள்ளது.

இதில் தெரிவாகும் அணிகளுக்கான போட்டிகள் புதுக்குடியிருப்பு மாலதி விளையாட்டு அரங்கில் சுழற்சி முறையில் நடைபெறும் என்பதை முல்லை மாவட்டத்திற்கு உட்பட்ட அனைத்து கழகங்களுக்கும் அறியத்தருவதோடு இது வரை எம்மோடு தொடர்பு கொள்ளாதோரும் முல்லை மாவட்ட அரசியல் துறைச் செயலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றீர்கள். (08)




# தற்போதைய தென்னாபிரிக்க அணி சிறந்த ஒருநாள் அணியாகத் திகழும்

தென்னாபிரிக்காவின் தற்போதைய கிரிக்கெட் அணி நாட்டின் அதி சிறந்த சர்வதேச ஒரு நாள் ஆட்ட அணியாகத் திகழும் என அவ்வணியின் சகலதுறை வீரர் ஜக்கலிஸ் தெரிவித்துள்ளார்.

தற்போது அணியில் பல இளம் வீரர்கள் விளையாடி வருவதாகவும் அவர்கள் அனைவரும் திறமையை வெளிப்படுத்திவருவதாகவும் அவர் கூறியுள்ளார். இவர்கள் மேலும் அனுபவங்களைப் பெறும் அதேவேளை உலகண்டத்தில் மேலும் பல போட்டிகளில் பங்கெடுத்தால் அணி அதிசிறந்த அணியாக பிரகாசிக்கும் என்று தெரிவித்துள்ள அவர், 1999ஆம் ஆண்டு உலகக்கிண்ணப் போட்டியில் அரையிறுதிவரை முன்னேறிய அன்றைய அணியே அப்போது உலகில் தலைசிறந்த அணியாகத் திகழ்ந்தது என்பதை நினைவுபடுத்தியுள்ளார்.




# டெஸ்ட் அரங்கில் இரண்டாவது இடத்தில் லாறா

டெஸ்ட் அரங்கில் அதிக ஓட்டங்கள் எடுத்தவர் பட்டியலில் மேற்கிந்தியத்தீவு நட்சத்திர வீரர் பிரையன் லாறா (10,934) இரண்டாவது இடத்துக்கு முன்னேறினார் நேற்று முன்தினம் 12 ஆவது ஓட்டத்தை கடந்த போது இந்த மைல் கல்லை எட்டினார். இரண்டாவது இடத்தில் இருந்த அவுஸ்திரேலியாவின் ஸ்டீவ்வோ (10,927) மூன்றாம் இடத்துக்கு தள்ளப்பட்டார் மற்றொரு அவுஸ்திரேலிய வீரரான ஆலன் போடர் (11,174) முதல் இடத்தில் உள்ளார்.



# ஒரு நாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் அக்ரமின் சாதனையை சமன் செய்தார் சச்சின்



ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் 356 ஆட்டங்களில் ஆடிய பாகிஸ்தான் முன்னாள் தலைவர் வசிம் அக்ரமின் சாதனையை டெண்டுல்கர் சமன் செய்தார்.

சர்வதேச ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தான் முன்னாள் தலைவர் வசிம் அக்ரம் 356 ஆட்டங்களில் ஆடிய வீரர் என்ற சாதனைக்கு உரியவராக விளங்கி வந்தார்.

இந்த சாதனையை இந்திய நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர் நேற்று முன்தினம் சமன் செய்தார். பெங்களூரில் நடந்த தென்னாபிரிக்காவுக்கு எதிரான இரண்டாவது ஆட்டத்தில் டெண்டுல்கர் ஆடினார். தொடக்க ஆட்டக்காரராக களம் இறங்கிய அவர் இரண்டு ஓட்டத்துடன் ஆட்டமிழந்தார். இது அவரது 356 ஆவது ஒரு நாள் ஆட்டமாகும்.

டெண்டுல்கர் 1989 ஆம் ஆண்டு டிசம்பர் 18 ஆம் திகதி குஜரன்வாலாவில் நடந்த பாகிஸ்தானுக்கு எதிரான ஆட்டத்தில் ஒரு நாள் போட்டியில் அரங்கேற்றம் கண்டார். அப்போது அவருக்கு 16 வயதாகும்.

தற்போது 33 வயதான டெண்டுல்கர் 356 ஒரு நாள் போட்டியில் ஆடி 38 சதம், 71 அரை சதத்துடன் மொத்தம் 13,877 ஓட்டங்கள் குவித்துள்ளார். இதில் 1,469 நான்கு ஓட்டங்களும்,147 ஆறு ஓட்டங்களும் அடங்கும். ஒரே போட்டியில் அதிகபட்சம் ஆட்டம் இழக்காமல் 186 ஓட்டம் எடுத்துள்ளார், பந்து வீச்சில் 140 விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ளார். 107 பிடிகளையும் எடுத்துள்ளார், 123 டெஸ்டில் விளையாடி 34 சதம்,41 அரை சதத்துடன் 10,134 ஓட்டங்கள் குவித்துள்ளார். அதிகபட்சமாக ஒரு இனிங்சில் ஆட்டம் இழக்காமல் 248 ஓட்டங்கள் எடுத்துள்ளார். பந்து வீச்சில் 37 விக்கெட் வீழ்த்தி உள்ள அவர் 77 பிடிகளையும் எடுத்துள்ளார்.

ஒரு நாள் போட்டியில் 300 ஆட்டத்துக்கு மேல் ஆடிய வீரர்கள் விபரம் வருமாறு:-

டெண்டுல்கர் (இந்தியா), அக்ரம் (பாகிஸ்தான்)- 356 இன்சமாம் (பாகிஸ்தான்)- 347, ஜெயசூரியா (இலங்கை)- 345, முகமது அசாருதீன் (இந்தியா)- 334, ஸ்டீவ்வோ (அவுஸ்திரேலியா)- 325, அரவிந்த டி சில்வா (இலங்கை)- 308



# சீனியர் வீரர்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும் புலம்புகிறார் இந்திய வேகப்பந்து வீரர் நெஹ்றா

திறமையும், முழு உடல்தகுதியும் உள்ள சீனியர் வீரர்களுக்கு சப்பல் கட்டாயம் முன்னுரிமை வழங்க வேண்டும் என புலம்புகிறார் இந்திய வேகப்பந்து வீச்சாளர் ஆசிஷ் நெஹ்றா.

2003 உலகக் கோப்பை தொடரில் சிறப்பாக பந்து வீசியவர் ஆசிஷ் நெஹ்றா முன்னணி பந்துவீச்சாளராக ஜொலித்துக் கொண்டிருந்த இவர் பயிற்சியாளர் கிரெக் சப்பல் வருகைக்குப் பின்னர் காணாமலே போய் விட்டார். இப்போது மீண்டும் இந்திய அணியில் இடம் பெற காத்துக் கொண்டிருக்கும் இவர் அளித்த பேட்டி;

இளம் வீரர்களுக்கு வாய்ப்பு வழங்கும் சப்பலின் திட்டம் நிச்சயம் இந்திய அணியை வலுவானதாக மாற்றும் சிறந்த வீரர்கள் மட்டுமே அணியில் இருக்க வேண்டும் என அவர் விரும்புகிறார். இதனால் யாருக்கும் நிலையான இடம் கிடையாது இது நல்ல முடிவுதான். ஆனாலும் திறமையான முழு உடல் தகுதியுடன் இருக்கும் சீனியர் வீரர்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும். என்னைப் பொறுத்த வரையில் இப்போது நூறு சதவீத முழு உடல் தகுதியுடன் இருக்கிறேன்.

காயத்திலிருந்து குணமடைந்த பின் பயிற்சியை இன்னும் ஆரம்பிக்கவில்லை. இன்னும் பத்து நாட்களுக்குள் பயிற்சி செய்யத் தொடங்கி விடுவேன். பாகிஸ்தான், இந்தியா போன்ற மைதானங்களில் விளையாட வேண்டுமெனில் உடல் தகுதி மிகவும் அவசியம். இதனால் உள்ளூர் போட்டிகளில் விளையாடி எனது திறமையையும் உடல் தகுதியையும் நிரூபிப்பேன். அடுத்த ஆண்டு நடக்கவிருக்கும் பாகிஸ்தான் தொடரில் வாய்ப்பு கிடைக்கும் என்ற நம்பிக்கை இருக்கிறது என்றார் நெஹ்றா.



தென்னாபிரிக்காவின் வேகப்பந்து வீச்சாளர் ஆன்ரு நெல் நேற்று முன்தினம் போட்டியிலும் ஒழுங்கீனமாக நடந்து கொண்டார். ஹைதராபாத்தில் யுவராஜ் சிங்கை பகைத்துக் கொண்ட இவர் இம்முறை காம்பிருடன் மோதினார். இவரது பந்தில் காம்பிர் இரண்டு நான்கு ஓட்டங்கள் விளாசியதும் திட்டினார். பதிலுக்கு காம்பீரும் கோபப்பட நடுவர்கள் தலையிட்டு சமாதானம் செய்தனர்.

# பைசலாபாத் டெஸ்ட் போட்டி ஓட்டம் குவிக்கிறது பாகிஸ்தான்

பாகிஸ்தான்- இங்கிலாந்து அணிகளுக்கிடையில் பைசலாபாத்தில் நேற்று ஆரம்பமான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் முதலில் ஆடும் பாகிஸ்தான் அணி நான்கு விக்கெட்டுக்களை இழந்து 300 ஓட்டங்களைப் பெற்று வலுவான நிலையிலுள்ளது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் முதலில் துடுப்பாட தீர்மானித்தது. ஒரு கட்டத்தில் 82 ஓட்டங்களுக்கு மூன்று விக்கெட்டுக்களை இழந்த பாகிஸ்தான், இன்சமாம், யுகானா ஆகியோரின் சிறப்பான துடுப்பாட்டம் மூலம் ஓட்டங்களைக் குவித்து வருகிறது.

யுகானா 78, மலிக் 27, சல்மான்பட் 26 ஓட்டங்களை பெற்று ஆட்டமிழந்தனர். ஆட்டமிழக்காது இன்சமாம் உல்-ஹக், அப்ரிடி முறை 80, 67 ஓட்டங்களைப் பெற்று களத்தில் உள்ளனர். பந்து வீச்சில் ஹொக்காட், பிளின்டொப், ஹார்மிசன் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர். முதலாவது டெஸ்ட் போட்டியை பாகிஸ்தான் வெற்றி பெற்றுள்ள நிலையில் இப்போட்டி இங்கிலாந்து அணிக்கு முக்கியத்துவம் வாய்ந்த போட்டியாக அமைந்துள்ளது. இன்று போட்டியின் இரண்டாம் நாளாகும்.



# பாகிஸ்தான் பந்துவீச்சாளர்களில் தவறு; பயிற்சியாளர் வூல்மர் ஐ.சி.சி மீது கண்டனம்

பாகிஸ்தான் பந்து வீச்சாளர்கள் இருவரின் பந்து வீச்சில் தவறு காணப்பட்டுள்ளமை தொடர்பாக அந்நாட்டு கிரிக்கெட் அணி பயிற்றுநர் பொப் வூல்மர் சர்வதேச கிரிக்கெட் சபை மீது கண்டனம் தெரிவித்துள்ளார்.

சபீர் அகமட் இங்கிலாந்துடனான போட்டியில் ஒழுங்கீனமாக பந்து வீசியதாகக் கூறப்பட்டாலும் அவரை சர்வதேச போட்டிகளிலிருந்து நிறுத்துவது என்பது முறையல்ல என்று தெரிவித்துள்ள வூல்மர் அகமட் பரிசோதனைக் குட்படுத்தப்பட்டபின் விரைவில் அணிக்குதிரும்புவார் என்றார். சபீர் அகமட் இதற்கு முன்பும் மேற்கிந்திய தீவுகளுடனான போட்டியின் போது பந்து வீச்சில் முறைப்பாடு செய்யப்பட்டு தடைவிதிக்கப்பட்டிருந்தார்.

சிந்தனைக்கு



சிங்களப் பயங்கரவாதமானது எமது தேசிய ஆன்மாவில் விழுத்திய வடுக்கள் என்றுமே மாறப்போவதில்லை.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 21.11.2005

தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல்
natham23 ela@ yahoo.com

## தமிழ் மக்களின் முடிவு!

சனாதிபதித்தேர்தலில் தமிழ் மக்கள் வாக்களிப்பில் கலந்து கொள்ளாது, தேர்தலைப் புறக்கணித்தமைக்குக் கடந்த காலப் பட்டறிவும், சிங்களத் தலைவர்கள் மீதும் நம்பிக்கை கொள்வதற்கு இல்லை என்ற தெளிந்த முடிவுமே காரணமாகும். ஆனால் தமிழ் மக்களின் இம்முடிவிற்கு வடக்கு கிழக்கில் தேர்தலில் நடந்த வன்முறைகள், அச்சுறுத்தல்கள் காரணம் என சில அமைப்புக்கள் அபிப்பிராயத்தைத் தோற்றுவிக்கவும் முற்படாமல் இல்லை.

இம்முறை தேர்தல் தினத்தன்று வடக்கு கிழக்கில் வன்முறைகள் பெரியளவில் இடம் பெற்றதாகத் தகவல்கள் இல்லை. அதிலும் குறிப்பாக வடக்கில் வன்முறைகள் இடம்பெற்றதான தகவல்கள் இருப்பதாகவும் தெரியவில்லை. ஆயினும் மக்கள் வாக்களிக்க வீதிகளில் இறங்கவில்லை என்பதே உண்மையாகும்.

ஏனெனில் மக்கள் தேர்தல் நாளை துக்கநாளாக கடைப்பிடித்திருந்தனர். கடைகள் மூடப்பட்டிருந்தன. போக்கு வரத்துச்சேவைகள் இடம்பெறவில்லை. மக்கள் வாக்குச் சாவடிகள் பக்கம் தலைகாட்டவே முற்படவில்லை. ஆனால், இது மக்களின் அவசர முடிவல்ல. இம்முடிவை மக்கள் ஏற்கனவே எடுத்திருந்தனர். இதனை வன்முறை மூலமோ அன்றி அச்சுறுத்தல் மூலமோ இடம் பெற்றதாகக் கூறுவது பேரினவாத ஆட்சியாளர்கள் கடந்த காலத்தில் தமிழ் மக்களின் உரிமைக்கானபோராட்டங்கள் குறித்து செய்துவந்த பொய்ப் பிரச்சாரத்திற்கு ஒப்பானதே.

இது ஒருபுறம் இருக்க அண்மைக்காலத்தில் வடக்கு -கிழக்கில் நிலவும் சூழ்நிலையை விட படுமோசமான சூழ்நிலையில் பல தேர்தல்கள் இடம்பெற்றுள்ளன. பல சிங்கள அரசுத்தலைவர்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும் கூடத்தெரிவு செய்யப்பட்டிருந்தனர். ஆனால் அவற்றை எல்லாம் ஏற்றுக்கொண்டு அவர்களிடமே ஆட்சியும் அரசாங்கங்களும் ஒப்படைக்கப்பட்டமையுமே வரலாறாகும்.

இதற்கும் அப்பால் வடக்கு–கிழக்கில் கூட தமிழ் மக்களை வாக்களிக்காது தடைசெய்வதற்கு பெரும் முயற்சி செய்யப்பட்ட தேர்தல்களும் நடந்ததுண்டு. ஆனால் தமிழ் மக்கள் அவற்றை மீறி வாக்களித்தோடு தமது சனநாயக உரிமைமூலம் தமது தெளிவான முடிவை அளித்ததும் உண்டு

ஆகையினால், மக்கள் வாக்களிக்க விரும்பினால் அவர்களைத் தடைசெய்வது என்பது சாத்தியமானதல்ல, அதனை மக்கள் மேற்கொண்டே இருப்பர். ஆனால் தமிழ் மக்கள் தேர்தலில் வாக்களிக்க விரும்பவில்லை என்பதே யதார்த்த நிலையாகும். தமிழ்மக்களின் ஒட்டுமொத்த முடிவால் தமிழ் இன விரோத குழுக்களும் தேர்தல் மோசடியில் ஈடுபட முடியாது போய்விட்டது என்பதே நிதர்சனமாகும்.

மக்களை அச்சுறுத்தி தேர்தலை புறக்கணிக்க வைப்பதென்பது சாத்தியப்படானதொன்றல்ல. இதற்கு இலங்கையில் மட்டுமல்ல உலகில் பல உதாரணங்கள் உண்டு. எடுத்துக்காட்டாக ஈராக்கிலும் ஆப்கானிலும் தேர்தலில் வாக்களிக்கக்கூடாதெனத் தீவிரவாதிகள் அச்சுறுத்தியபோதும் அந்நாட்டு மக்கள் வாக்களிப்பில் கலந்து கொண்டனர். அச்சுறுத்தலுக்கு அவர்கள் அஞ்சவில்லை.

அதேபோன்று இந்தியா , காஷ்மீர் பகுதியிலும் தீவிரவாதிகளினால் தேர்தலுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்படும் போதும் மக்கள் தேர்தலில் வாக்களிக்காதுவிட்டார்களா? வாக்களிப்பில் கலந்து கொள்வதில்லை என ஏற்கனவே தீர்மானித்தவர்கள் மட்டுமே தேர்தலில் வாக்களிக்காதுவிட்டனர். மக்களை மிரட்டி, அச்சுறுத்தி எதையும் செய்துவிடலாம் என யாராவது அபிப்பிராயம் கொள்வார்களோயானால் அது தவறான சிந்தனையாகும்.

அவ்வாறு முடியுமானால் ஈராக் மக்களும், ஆப்கான் மக்களும், காஷ்மீர் மக்களும் வாக்களித்தமைக்கு காரணம் என்ன? அமெரிக்க, இந்தியத்துருப்புக்கள் பாதுகாப்பு அளிக்கும் என்பதினாலா? தீவிரவாதிகள் தம்மை ஒன்றும் செய்துவிடமுடியாது என்ற நம்பிக்கையின் அடிப்படையிலா? அவ்வாறானால், ஈராக்கிலும், ஆப்கானிலும் காஷ்மீரிலும் வன்முறைகளில் மக்களுக்குப்பாதிப்பு ஏற்படவில்லையா? அன்றி வன்முறைகள் தான் நிறுத்தப்பட்டு விட்டனவா?

அவ்வாறு இல்லாது மக்கள் வன்முறைக்கும், அச்சுறுத்தலுக்கும் அஞ்சி வாக்களிக்காது விடின், அங்கு மக்கள் தேர்தலில் பங்கேற்றது எவ்வாறு? அங்கு நிலை கொண்டுள்ள இராணுவத்தினர் மக்களை அள்ளிக் கொண்டு வாக்களிக்க நிர்ப்பந்தித்திருந்தார்களா? அன்றி வாக்களிக்காதுவிடில் கொன்று குவித்துவிடப்போவதாக அச்சுறுத்தினார்களா? அல்லது மக்கள் பயந்து வாக்களித்தார்களா? இவ்வாறு எதுவுமில்லை. மக்களின் விருப்பு வெறுப்பே வாக்களிப்பதைத் தீர்மானித்தது.

சிறிலங்கா ஆயுதப்படையின் 40,000 ற்கு மேற்பட்ட துருப்புக்களும் பல ஆயிரம் பொலிசாரும் பாதுகாப்பு வழங்குவதற்கும் தயாராக இருந்த போதும் தமிழ் மக்கள் வாக்களிக்கத் தயாராக இல்லை என்பதே நிதர்சனமானதாக இருந்தது. மக்கள் அச்சுறுத்தலால் வாக்களிப்பில் கலந்து கொள்ளாமலும் இல்லை. பாதுகாப்பு வழங்கப்படும் என்ற நம்பிக்கையில் வாக்களிப்பில் கலந்து கொள்வதும் இல்லை.

ஆகையினால் மக்களின் புறக்கணிப்பிற்கு தவறான விளக்கம் அளிக்க முற்படுபவர்கள் சிறிலங்கா ஆட்சி தலைவர்கள் போன்று தமிழ்மக்கள் குறித்துத் தவறான முடிவிற்குச் செல்பவர்களாகவே இருக்க முடியும். ஆனால் அதற்காக தமிழ்மக்கள் தமது நிலைப்பாட்டிலேயோ [illegible]வுகளிலோ மாற்றம் எதுவும் செய்வார்கள் என எதிர்பார்ப்பில் [illegible]மாற்றமே அடைவார்கள்.

# "யானை-புலி கூட்டணி" பிரச்சாரம் பொய்யாகிவிட்டது மகிழ்ச்சியே

## உடுவே தம்மாலோக தேரர்

(கொழும்பு)

சிறிலங்கா சனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு வாக்களிக்காததால் "யானை - புலி கூட்டணி" என்ற எதிர்க்கட்சியினரது பிரச்சாரம் பொய்யாகிவிட்டதில் மகிழ்ச்சியடைவதாக உடுவே தம்மாலோக தேரர் கூறியுள்ளார்.

கிராமப்புற அளவில் ஐக்கிய தேசியக் கட்சியின் கட்டமைப்பு பலவீனமாக உள்ளது. அது வலுப்படுத்தப்பட வேண்டும். சிறிலங்காவை ரணில் பிளவுபடுத்திவிடுவார் என்று மேற்கொள்ளப்பட்ட பொய்ப்பிரச்சாரத்தினால் தென்னிலங்கை மக்களின் வாக்குகள் ரணிலுக்குக் கிடைக்கவில்லை. ஜே.வி.பி.யினர் தான் இந்த மூளைச்சலவை செயற்பாடுகளை மேற்கொண்டனர்.

ரணில் விக்கிரமசிங்கவை தமிழீழ விடுதலைப்புலிகளும் ஆதரிக்காதது மகிழ்ச்சிதான். யானை - புலி கூட்டணி அமைந்துள்ளதாக மேற்கொள்ளப்பட்ட பிரச்சாரங்கள் பொய்யானவை என்று நிரூபித்துள்ளது.

தென்னிலங்கையில் உள்ள தமிழர்களும் கூட ரணிலுக்கு இந்த முறை வாக்களிக்கவில்லை. அப்படியான நிலையில் யானை - புலி கூட்டணி எப்படியிருக்க முடியும். தேர்தல் முடிவுகளையடுத்து ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையில் மாற்றம் எதுவும் தேவையில்லை என்று கருதுவதாகவும் தம்மலோக தேரர் கூறினார்.

# மகிந்த சனாதிபதியாக தெரிவானதில் வருத்தமும் இல்லை - மகிழ்ச்சியும் இல்லை!

## பாராளுமன்ற உறுப்பினர் மா.க. ஈழவேந்தன்

(கொழும்பு)

சிறிலங்காவின் சனாதிபதியாக மகிந்த ராஜபக்ஷ தேர்வு செய்யப்பட்டதில் எமக்கு வருத்தமுமில்லை மகிழ்ச்சியுமில்லை என்று தமிழ் தேசியக்கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் மா.க.ஈழவேந்தன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து ஈழவேந்தன் மேலும் கூறியுள்ளதாவது:

மகிந்த ராஜபக்ஷவை தென்னிலங்கை மக்கள் தேர்வு செய்துள்ளமை குறித்து நாம் ஆச்சரியப்படவில்லை. அவர்கள் அமைதியை நிராகரித்துள்ளார்கள். தமிழர்கள் தனித்துவமான இனம் என்பதை அவர்கள் தெளிவுபடுத்தியிருக்கிறார்கள்.

தமிழ் மக்களது உரிமைகளை, தமிழர் தாயகம், சுயநிர்ணய உரிமையை மகிந்த ராஜபக்ஷ அங்கீகரிக்காவிட்டால் தமிழர்கள் தங்களது பாதையைத்தேர்ந்தெடுக்க வேண்டியதுதான். எதுவும் நடக்கலாம். ஆனால் நாங்களே எங்களது எதிர்காலத்தைத்தீர்மானிப்போம்.

தமிழீழ தேசியத்தலைவர் பிரபாகரனின் மாவீரர் நாள் உரைதான் எங்களுக்கு முக்கியம். அவர் என்ன சொல்வார் என்பது எங்களுக்குத் தெரியவில்லை. கடந்த ஆண்டு மாவீரர் நாளின்போது பொறுமைக்கும் எல்லை உண்டு என்று எச்சரித்திருந்தார்.

கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு நிலைமை மிக மோசமடைந்துள்ளது.மகிந்தவின் தேர்வின் மூலம் மிகவும் மோசமடைந்துள்ளது.தமிழ் மக்களினது உரிமைகளை சிறிலங்கா அரசாங்கம் நிராகரித்தால் அதற்கு விடை புரட்சியில்தான் முடியும்.

எங்கள் மீனவர்கள் மீன்பிடித் தொழில் செய்ய முடிவதில்லை. எங்கள் மக்கள் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெறமுடியவில்லை. எங்கள் சொந்தத் தாயகத்திலிருந்து நாங்கள் வேருடன் பிடுங்கி எறியப்படுகிறோமா? என்றார் மா.க.ஈழவேந்தன்.

# புதிய அமைச்சரவையில் ஜே.வி.பி பங்கேற்காது?

(கொழும்பு)

சிறிலங்காவின் புதிய அமைச்சரவையில் எந்த அமைச்சுப் பொறுப்பையும் ஜே.வி.பி.ஏற்றுக்கொள்ளாது என்று கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இருப்பினும் ஜே.வி.பி.யின் பரப்புரைச் செயலாளர் விமல்வீரவன்ச சிறிலங்காவின் ஊடகத்துறை அமைச்சராக நியமிக்கப்படக்கூடும் என்று கூறப்படுகிறது.

கடந்த ஆண்டு, அரசாங்கத்திலிருந்து விலகிய ஜே.வி.பியை மீண்டும் அரசாங்கத்தில் பங்கேற்க அழைப்பது தொடர்பான பேச்சுக்கள் இருகட்சிகளிடையேயும் தீவிரமாக நடத்தப்பட்டு வருவதாகக் கூறப்படுகிறது.

# வடக்கு-கிழக்கில் மறுதேர்தல் நடத்தக் கோரி வழக்குத் தொடர ஐ.தே.க. ஆலோசனை

(கொழும்பு)

தமிழர் தாயகத்தில் மீண்டும் சிறிலங்கா சனாதிபதித் தேர்தலை நடத்த வலியுறுத்தும் வழக்கைத் தாக்கல் செய்வது குறித்து ஐக்கிய தேசியக் கட்சி இன்று முடிவெடுக்கவுள்ளது.

இது தொடர்பாக அந்தக் கட்சியின் பிரதிச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க கூறியுள்ளதாவது,

வடக்கு-கிழக்கில் நீதியானதும், நியாயமானதுமான தேர்தலை நடத்த தேர்தல் ஆணையாளர் தயானந்த திசாநாயக்க தவறிவிட்டார். வாக்குப் பெட்டிகள் பாதிக்கப்பட்ட பிரதேசங்கள், அரச சொத்துக்கள் மற்றும் ஊடகங்கள் முறைகேடுகள் ஆகியவற்றைச் சுட்டிக்காட்டி வடக்கு-கிழக்கில் நாம் மறு தேர்தலை நடத்த வலியுறுத்தியிருந்தோம்.

வாக்காளர்கள் வாக்களிப்பதைத் தடுத்தமைக்கான உரிய ஆதாரங்கள் இருந்தும் நாட்டின் எந்தப் பகுதியிலும் மறுதேர்தலை தேர்தல் ஆணையாளர் நடத்தவில்லை.

மகிந்த ராஜபக்ஷ உத்தியோகப்பூர்வமாகத் தெரிவு செய்யப்பட்டதாக தேர்தல் ஆணையாளர் அறிவிக்கும் முன்பாகவே மறுதேர்தலை நடத்த நாம் வலியுறுத்தினோம். முறைப்பாடு மனுவையும் கையளித்தோம்.

ஆனால், வடக்கு-கிழக்கில் வாக்காளர்கள் தடுக்கப்பட்டதாக தமக்கு எதுவித தகவலும் கிடைக்கவில்லை எனக் கூறி எமது முறைப்பாட்டை தேர்தல் ஆணையாளர் நிராகரித்துவிட்டார். அதேநேரத்தில் தேர்தல் முடிவுகளை அறிவித்தபோது வடக்கு-கிழக்கு நிலைமை குறித்த தனது அதிருப்தியை தயானந்த திசாநாயக்க வெளியிட்டிருந்தார்.

நாட்டின் மிக முக்கியமான தேர்தல் கணிப்பாளர்களான பவ்ரல் அமைப்பினரும் வடக்கு-கிழக்கில் மக்கள் வாக்களிக்கப்பட்டது தடுக்கப்பட்டதாகத் தெரிவித்துள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார்.

# வடக்கு-கிழக்குப்பகுதியில் மறுதேர்தல்; வன்முறைகளைக் கண்காணிக்கும் நிலையம் கோரிக்கை

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் சிறிலங்கா சனாதிபதித் தேர்தலை மீண்டும் நடத்தவேண்டும் என்று தேர்தல் வன்முறைகளைக் கண்காணிக்கும் நிலையம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக சிறிலங்கா தேர்தல் திணைக்கள ஆணையாளர் தயானந்த திசாநாயக்கவுக்கு அந்த அமைப்பு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

சிறிலங்காவின் தேர்தல் சட்டங்களுக்கமைய நீதியானதும், நியாயமானதுமான தேர்தலை நடத்த வடக்கு-கிழக்கில் மறு தேர்தல் நடத்தப்படவேண்டும்.

இது தொடர்பில் தேர்தல் ஆணையாளருக்கு சிறப்பதிகாரங்கள் உள்ளன என்பதை சுட்டிக்காட்டுகிறோம். வடக்கு-கிழக்கில் தேர்தல் நாளில் நடந்த வன்முறைகள் தொடர்பான அறிக்கையைப் பரிசீலித்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வீர்கள் என நம்புகிறோம்.

வடக்கில் வாக்காளர்கள் வாக்களிப்பதைத் தடுக்கும் வகையில் சுவரொட்டிகளும் துண்டுப் பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டன. இதன் விளைவாக 1.5 வீதமான வாக்குப் பதிவு அங்கு பதிவாகியுள்ளது. கிழக்குப் பிரதேசத்திலும் வாக்காளர்கள் வாக்களிக்க அனுமதிக்கப்படவில்லை.

கடந்த 16ஆம் திகதி இரவு 6.30 மணி முதல் 17ஆம் திகதி வாக்களிப்பு நாள் வரையில் வடக்கு-கிழக்கில் நடைபெற்ற தாக்குதல்களின் தொகுப்புக்களை இதனுடன் இணைத்துள்ளோம். நீதியானதும், நியாயமானதுமான தேர்தலை நடத்த வடக்கு-கிழக்கில் மறுதேர்தலை நடத்த வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கிறோம் என்று அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நோர்வே தவிர்க்கப்படுவதை இந்தியா ஏற்றுக்கொள்ளாது!

-நேருபல்கலைக்கழகபேராசிரியர் சகாதேவன்

நோர்வையை சிறிலங்கா அரசாங்கம்அமைதிப்பேச்சுவார்த்தையில் ஈடுபடுத்தாமல் தவிர்க்குமானால் அதனை இந்தியா ஏற்றுக் கொள்ளாதென புதுடில்லி ஜவகர்லால் நேரு பல்கலைக்கழக தெற்காசிய விவகாரத்துறை பேராசிரியர் சகாதேவன் கூறினார்.

மேலும் அவர் தெரிவிக்கையில்; தற்போதைய நிலமையைவைத்துப் பார்க்கப்போனால் நோர்வேயை விட்டால்வேறு எந்த நாடும் நோர்வே செய்த அளவிற்கு தன்னை ஈடுபடுத்திக்கொண்டு ஒரு அமைதிப் பேச்சுவார்த்தைய்ய முன்னேற்ற முடியாது. இது தொடர்பாக இந்தியா கொண்டுள்ள கருத்து ஒரு நல்ல கருத்து நோர்வேயை வேண்டாம் மென்றுகூறினால் இந்தியா நேரடியாக அதனை எதிர்க்காவிட்டாலும் அதை ஒரு நல்ல கருத்தாக எடுத்துக் கொள்ளாது என்றார்.

மகிந்தராஜபக்ஷ அயல்நாட்டு விவகாரங்களைப் பொறுத்த மட்டில் அனுபவமில்லாதவர் புதிதாக இந்த வேலைக்கு வந்திருக்கிறார். இந்தியா-இலங்கை உறவு என்பது அடிப்படையாகஇரண்டு நாடுகளை எடுத்துக்கொண்டால், தற்போதுள்ள ஒரு நாட்டினை நீக்கும் திடீர் திருப்பம் என்று ஒன்று உடனடியாகவர வாய்ப்பில்லை. ஆனால் எந்தளவுக்கு இந்திய-இலங்கை உறவுகள்உறுதியாகவும் முன்னேற்றமடையும்என்பது இலங்கை சனாதிபதியினுடைய உள்நாட்டு கொள்கைகளைப் பொறுத்தே அமையும்.

உள்நாட்டு கொள்கை ஒன்றில் எந்தளவிற்கு மகிந்தராஜபக்ஷ அமைதிப்பேச்சுவார்த்தையைக் கொண்டுபோகிறார், அவர் எந்த மாதிரியான கொள்கைகளைக் கடைப்பிடிக்கப்போகின்றார் என்பதை வைத்தே இந்திய- இலங்கை உறவு அமையும் என்றார்.



நேற்று இடம்பெற்ற சந்திரிகாவின் அமைச்சரவையின் இறுதிச் சந்திப்பின் போது மகிந்தவும் சந்திரிகாவும் கலந்துகொண்டுள்ளனர் இதில் அநுராவும் கலந்து கொண்டார்.

## பொதுமக்களை...

இச்சம்பவம் நேற்று மாலை6.30 மணிக்கு இடம் பெற்றுள்ளது.

இதுதொடர்பாக மேலும் தெரியவருகையில்; மாவீரர் நாளை கடைப்பிடிப்பதற்காக மக்கள் நினைவுப் பந்தல் ஒன்றை அமைத்துக் கொண்டிருந்தனர்.

மாவில் துறையிலுள்ள குமுதினி படுகொலை நினைவு மண்டபத்தில் நிலைகொண்டுள்ள சிறிலங்காக் கடற்படையினர் மக்கள் பந்தல் அமைக்கும் நடவடிக்கையை நிறுத்த வேண்டும் என்று மிரட்டி யுள்ளனர்.

மக்கள் தாம் பந்தல் அமைப்பது போர் நடவடிக்கை அல்ல என்றும் நினைவு கூரல் நடவடிக்கை என்றும் கூறி அதனை நிறுத்த மறுத்தனர்.

அப்போது படையினர் வான்நோக்கிச் துப்பாக்கி வேட்டுக்களை சரமாரியாகச் சுட்டனர் பின்னர் சூட்டி, அருந்தவசீலன் எனப்படும் இருவரைப் கைதுசெய்துள்ளன

படையினரின் இந் நடவடிக்கை குறித்து நெடுந்தீவு மக்கள் போர் நிறுத்தக்கண் காணிப்புக் குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

## புலிகளின்குரல்...

அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் ஏற்றினார். பொது மாவீரர்நினைவுக் கல்லறைக்கு சோதியா படையணி சிறப்புத் தளபதி கேணல் துர்க்கா மலர்மாலை அணிவித்தார்.

புலிகளின் குரல் பொறுப்பாளர் நா.தமிழன்பன் தலைமையில் நடைபெற்ற வானோசை- 15 விழாவில் வரவேற்புரையை புலிகளின்குரலின் மூத்த ஒலிப்பதிவாளர் விஜயமலர் நிகழ்த்தினார்.

மாவீரர் வணக்க நடனம்,வரவேற்பு நடனம் ஆகியவற்றை நா.செந்துரன் வழங்கினார்.வாழ்த்துப்பாடலை காந்தருபன் அறிவுச்சோலை மாணவர்கள் வழங்கினர்,

சிறப்புரையை விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் கா.வே பாலகுமாரன் நிகழ்த்தினார். வானோசை-15 கலை இலக்கியப் போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கு தமிழீழ தேசியத்தலைவர் அவர்கள் கையெழுத்திட்டளித்த சான்றிதழ்களை அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன், தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், சோதியா படையணி சிறப்புத்தளபதி கேணல் துர்க்கா, மாவீரர்பணிமனைப் பொறுப்பாளர் பொன்தியாகம், மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழினி ஆகியோர் வழங்கினர்.

தொடர்ந்துபுலிகளின்குரல் பொறுப்பாளர், போராளிகள், பணியாளர்களுக்கு அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் பரிசில்களை வழங்கினார்.அதன் பின் காந்தருபன் அறிவுச் சோலையைச்சேர்ந்த விசாலகன் தலைமையில் "வானலை ஏறிவரும் தமிழரின் வீரக்குரலே வாழி" என்ற தலைப்பிலான கவியரங்கம் நடைபெற்றது. நன்றியுரையை புலிகளின்குரல் துணைப் பொறுப்பாளர்வி.செயல்வீரன்நிகழ்த்தினார். (லோ.தீ)

## வங்காள......

வளிமண்டலத்திணைக்களம் அறிவித்துள்ளது. இத்தாழமுக்கம் நேற்று நண்பகல் மட்டக்களப்புக்கு கிழக்கே 300 கிலோமீற்றர் தூரத்தில் அது நிலை கொண்டிருந்தது எனவும் அதுமெதுவாகவடமேற்குத் திசைநோக்கி நகரக்கூடும் எனவும் தெரிவித்தது. இதன் காரணமாகவடக்கு, கிழக்கு, தென்கிழக்குப் பகுதியில்கடும் மழையுடன்,கடும்காற்று, கடற்கொந்தளிப்பு என்பன ஏற்படும் எனவும் அறிவித்துள்ளது.

## யாழ்...

யாரும் வென்றதாக வரலாறுஇல்லை.

இந்தியாவினது படைத்தளபதிகளாக இருந்தாலும் சரி சிறிலங்காவினது படைத்தளபதிகளாக இருருந்தாலும் சரி கடந்த 25 ஆண்டுகாலம் விடுதலைப்புலிகளுக்கு எதிராகப் படை நடத்தி தங்களுடைய ஆயிரக்கணக்கான இளைஞர்களைத்தான் இழந்தார்களேயொழிய, எங்களை வென்றதாக வரலாறுஇல்லை.

தமிழர்களின் தலைவர் பிரபாகரனின் ஆட்சியில்,அவரது அதிகாரத்தில் நாங்கள் ஆளப்பட வேண்டுமாக இருந்தால், தமிழர்கள் தங்களைத்தாங்களே ஆள வேண்டுமாக இருந்தால் அவரதுகாலத்திலேயே எமது இறுதிஇலக்கான தமிழீழத்தை அடைவதைத் தவிர வேறு வழியில்லை.

இன்று ஆட்சிப் பொறுப்பேற்கிற சிங்களத் தலைமைகளுக்கு விடுதலைப்புலிகளின் பலம் பற்றி தெரியாமல்இருக்கலாம். ஆனால் இதுவரை படை நடத்திய சிங்களப் படைகளுக்குவிடுதலைப்புலிகளின் பலம் என்ன என்று நன்கு தெரியும்.

நமது தலைவரின் சமாதான வழியில் சிங்களத்தின் தலைமை பேசித்தீர்வு காணப்போவது கிடையாது. இதை சிங்கள மக்களும் நான்காண்டுகாலமாக மறந்து விட்டார்கள்.

நான்கு ஆண்டுகளாக போர் ஓய்ந்து நிற்கிறது. ஆனால் நடந்த திசை, பக்கங்கள், பாதைகள் எல்லாவற்றையும் மறந்துவிட்டு இன்றைக்கு இனவாதத்துக்கு மட்டும் சிங்களவர்கள் வாக்களித்து இனவாதத்தை வலுவேற்றியிருக்கிறார்கள்.

இந்த வலுவை உடைத்து தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் இறுதிக் கட்டத்துக்கு தள்ளி விடுதலையை வீச்சாக்க வேண்டிய பொறுப்பு மக்களைத்தான்சாரும்.

இன்று குடாநாட்டிலே 40 ஆயிரம் சிங்களப் படைகள் உள்ளன. இவர்கள் இங்கிருந்து தப்பிப்போக ஒரே ஒரு வழி கடல் பாதை மட்டும்தான். இந்தக் குடாநாட்டினது வீழ்ச்சிதான் தமிழீழ விடுதலைப் போரின்இறுதிப் போராக இருக்கும் அதில் மாற்றமில்லை என்றார் கேணல் சூசை.

## வடக்கு-கிழக்கில்...

அசௌகரியங்களுக்குள்ளாகியுள்ளனர்.

வடமராட்சி கிழக்கு பகுதியில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள் வாழ்ந்து வந்த 16 குடியிருப்புக்களின் பெருமளவான குடியிருப்புக்கள் வெள்ளத்தில் மூழ்கி விட்டன. ஏற்கனவே பெய்த மழை காரணமாக பாதிக்கப்பட்டிருந்த இந்த மக்கள் தற்போது மீண்டும் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளனர். இதனால் இவர்கள் இடம்பெயர நேர்ந்துள்ளது. மழை தொடருமானால் ஏனைய குடியிருப்புக்களும் வெள்ளத்தில் மூழ்கும் அபாயம் தோன்றியுள்ளது.

திருகோணமலை நகரிலும் மாவட்டத்தின் ஏனைய பகுதிகளிலும் 24 மணித்தியாலங்களுக்கு மேலாகப் பெய்துவரும் தொடர்ச்சியான பெரு மழைகாரணமாக, தாழ்ந்த பிரதேசங்களில் வெள்ளம் ஏற்பட்டுள்ளது. தாழ்ந்த பிரதேசங்களில் உள்ள வீடுகளினுள் வெள்ளம் புகுந்துள்ளது. புல்மோட்டையில் சுமார் 35 குடும்பங்கள் இடம்பெயர்ந்து பொதுக்கட்டடங்களில் தங்கியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. திருகோணமலை-நிலவளி வீதியின் ஒரு பகுதி, அலஸ்தோட்டப்பகுதி வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. உப்புவெளி, வரோதய நகர், அலஸ்தோட்டம் அகதி முகாம் பிரதேசம் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

திருகோணமலைநகரிலும் தாழ்ந்த பகுதி வீதிகளில் வெள்ளம் ஏற்பட்டுள்ளது. கடற்கோளினால் பாதிக்கப்பட்டு தற்காலிக குடியிருப்புக்களில் தங்கியிருக்கும் குடும்பங்கள்கடும் மழையினால் சிரமங்களுக்கு ஆளாகியுள்ளன. பொதுக்கட்டடங்களில் சில குடும்பங்கள் தஞ்சமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களைதிருமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் க.துரைரெட்ணசிங்கம், திருமலை பிரதேச உதவிச்செயலாளர் திருமதி எஸ். ஜலதீபன்,சட்டத்தரணி கா. சிவபாலன் மற்றும் உப்புவெளி பிரதேசசபை அதிகாரி ஜெயபாலன் சகிதம் சென்று பார்வையிட்டார். பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்குத் தேவையான நிவாரணங்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றுஉதவிப் பிரதேச செயலாளர் திருமதி ஜலதீபன் தெரிவித்தார். தொடர்ந்து மழைநேற்றுமாலையும் பெய்தது.

இதேவேளை யாழ்.குடாநாட்டில் தற்போது பெய்துவரும் அடை மழைகாரணமாக தெலைபேசி இணைப்புக்களில் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

யாழ்குடாநாட்டில் தற்பொழுது பெய்துவரும் அடை மழைகாரணமாக தொலைபேசி இணைப்பு பிரதான கம்பி இணைப்புக்களுக்குள் மழை நீர் புகுந்திருப்பதன் காரணமாகவே இக் கோளாறுகள் ஏற்பட்டுள்ளன.

கடந்த 24 மணி நேரகாலப் பகுதியில் மட்டக்களப்பு மாவட்டத்தில் 94.6 மில்லி மீற்றர் மழை பெய்துள்ளதாக கால நிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.வங்காள விரி குடா கடற்பரப்பில் ஏற்பட்டுள்ள தாழமுக்கம் காரணமாகவே இந்த அசாதாரண கால நிலை நிலவுவதாகவும், அவதான நிலையம் தெரிவித்துள்ளது. (லோ.32,33,20,25,41)

## பேரினவாதத்தினுடைய..

அவர் மேலும் தெரிவிக்கையில், இப்பொழுது என்ன நடந்திருக்கிறது என்றால் மகிந்தர் எல்லாவற்றையும் திறந்துவிட்டிருக்கிறார். அதாவது பேரினவாதப்பூதத்தை திறந்து விட்டிருக்கிறார். ஒற்றையாட்சி எதிர்ப்புக் கோசத்தை, அடிப்படைவாத ஆதரவு நிலைப்பாட்டைத் திறந்துவிட்டார். பௌத்தர்களுடைய பிற்போக்குத் தனத்தை, போருக்கான வாய்ப்பை திறந்துவிட்டார். காழ்ப்பு, வெறுப்பு எனப்படும் அனைத்து மோசமான விடயங்களையும் இந்தத் தேர்தல் மூலம் திறந்து விட்டிருக்கிறார். தமிழ் மக்களோ மிக அமைதியாக மௌனமாக தங்கள் கருத்தினைத்தெரிவித்துள்ளனர் என்றார்.

ரணில் விக்கிரமசிங்க தோல்வியடைந்தது பற்றி மேற்குலகம் இப்பொழுது எப்படி உணர்கிறது என்று கேட்டபோது;

சிங்களவர்களுக்கு மேற்குலகம் வேண்டும். எப்பொழுது வேண்டுமென்றால் தமிழ் மக்கள் மீது போரைத் திணிப்பதற்கும், அவர்களுடைய உரிமைகளை மறுப்பதற்கும்தான் மேற்குலகம் வேண்டும். உரிமைகளைக் கொடுப்பதற்கல்ல. எப்பொழுது வேண்டாம்? தங்களுடைய நலன்கள் பாதிக்கப்படும்போது மேற்குலகம் வேண்டாம். இந்த இரண்டகத்தை உணர்த்துவது தான் இந்தத் தேர்தல் முடிவு.

ஆகவே, சர்வதேசம் இந்த அமைதி முயற்சியில் ஈடுபடுமானால் அது மிகத் தெளிவாககட்டுக் கோப்பாக இறுக்கமாகச் செயற்பட வேண்டிய நிர்ப்பந்தத்திற்குள் தள்ளப்பட்டுள்ளது. இது சர்வதேசத்திற்கு மிகப் பெரியதொரு நிகழ்ச்சி நிரல் என்றார்.

தமிழர்கள் வாக்களித்திருந்தால் ரணிலை வெல்லச் செய்திருக்கலாம் எனச் சர்வதேசம் நினைக்கிறது. தமிழர்கள் ஏன் ரணிலைப் புறக்கணித்தார்கள்? என்று கேட்டபோது;

அரசியல் முதுமொழியொன்றை நான் கூறவேண்டும். "குறுகிய கால சலுகைகளுக்காக உரிமைகளை விட்டுக்கொடுத்தால் உண்மையில் நீ சலுகைகளையும், உரிமைகளையும் முற்றாக இழப்பாய்"

எதற்காக நாங்கள் ரணிலுக்கு வாக்களிக்க வேண்டும்? நீண்ட காலமாக 48ஆம் ஆண்டிலிருந்து ஐக்கிய தேசியக் கட்சியினுடைய நடவடிக்கைகளைப் பார்த்தால் நடந்துபோன அனைத்துப் படுகொலைகள் மிகமோசமான எதிர்ப்பு நடவடிக்கைகள், தமிழ் மக்களை திட்டமிட்டு அழிக்கும் சர்வதேச வலைப் பின்னலைப் பின்னிய வேகங்கள் என்பனவற்றை பார்க்க வேண்டும். ஆகவே, அற்ப சலுகைகளுக்காக ஒரு இனத்தினுடைய எதிர்காலத்தைப் பணயம் வைப்பது என்பது எப்பொழுதும் முடியாது என்றார்.

## சனாதிபதி...

கூறுகையில்; புரிந்துணர்வு ஒப்பந்தம், சுனாமிக் கட்டமைப்பு என்ற இரண்டுக்கும் எதிராகத்தான் இவர்கள் இந்தத் தேர்தலில் ஆணையைமக்களிடம் கேட்டிருந்தனர். அந்த வகையில் மக்கள் அவர்களுக்கு ஒரு ஆணை வழங்கியுள்ளார்கள். எனவே இவர்கள் சமாதானம் பற்றி வேறு வார்த்தைகளில் என்னதான் பேசினாலும்கூட அடிப்படையிலும் அடிப்படையாகபுரிந்துணர்வு ஒப்பந்தமும் சுனாமிக் கட்டமைப்பு பற்றிய விடயங்களும் காலாவதியாகிவிட்டன.இதுதான் மக்களின் தீர்ப்பு.

இப்படி ஒரு ஆணையைக் கேட்டுவிட்டு இனிமேல் சமாதானம் பற்றி என்ன கதைக்கப் போகிறார்? என்ன கதைக்க முடியும்?என்பது தான் இப்பொழுதுள்ள பிரதான பிரச்சினை என்றார்.

தமிழ்மக்களுடைய தேர்தல் புறக்கணிப்பு இப்பொழுது எப்படிப் பார்க்கப் படுகிறது.?எனக்கேட்டபோது;

இந்தத்தேர்தல் மூலம் இலங்கையில் இரு தலைமைகள் ஸ்தாபிக்கப்பட்டு விட்டன. இதனை ஆழமாகக்கூறுவதனால் இலங்கைத் தீவின் தென்பகுதியில் ஆயுதம் தாங்கிய போராட்டத்தில் ஈடுபட்டு அதனைக் கைவிட்ட சக்திகள் தமக்கு அந்த தொடர்ச்சியான பிரச்சினையின் விளைவாக வந்த விரக்தியின் விளைவாகஒருவரை ஆட்சியதிகாரத்துக்கு முன் நிறுத்தியுள்ளனர். அதேவேளை தமிழ் மண்ணிலும் அவ்வாறானதோர் ஆயுதப் போராட்டம் தமிழர்களின் பிரச்சினையின் பேரால் எழுந்தது. எனவே இப்பொழுது அந்த இரண்டு சக்திகளும் இந்த அரசியல் நிர்ணயகரமான பாத்திரத்தை எடுத்துள்ளனர்.

ஒருவர் வாக்களிப்பதன் மூலம் அந்தப் பாத்திரத்தை நிறைவேற்றியிருக்கிறார் ஒருவர் வாக்களிக்காததன் மூலம் அப்பாத்திரத்தை நிறைவேற்றியிருக்கிறார். இது வரலாற்றின் இயல்பான தர்க்கபூர்வ வெளிப்பாடு என்றார்.

சர்வதேச ரீதியாக பார்க்கும் போது வாக்களிப்பு நிராகரிப்பு என்பது ஒரு சனநாயக விரோதச் செயலாக இராதா எனக் கேட்டபோது

வாக்களிப்பதாக இல்லையா என்பதைத் தீர்மானிப்பது மக்களுடைய இயல்பான சுதந்திரம். வாக்களிப்பது சனநாயக உரிமைதான். வாக்களிக்காது விடுவதும் தீர்மானிப்பதும் சனநாயக உரிமைதான் என்றார்.

தமிழர்கள் இந்த வாக்களிப்பைப் புறக்கணித்ததன் மூலம்தங்களுக்கு ஏற்படவிருந்த ஒரு சமாதான வாய்ப்பை இழந்துவிட்டார்கள் என்று சில விமர்சகர்கள் கூறுகிறார்களே? என்று கேட்டபோது,

இலங்கைத்தீவில் சமாதான பூர்வமான தீர்வு என்பதற்கு இனிமேல் ஒரு போதும் இடமிருக்கமாட்டாது. எனவே இலங்கைத் தீவிலுள்ள முழு விடயங்களுமே அரசியலில் மிகவும் கூர்ப்படைந்து இருபாளங்களாகப் பிளந்து விட்டன. இந்த விடயம் இத் தேர்தல் மூலம் வெளிப்பட்டிருக்கிறது. இனி எவராலும் சமாதானம் என்ற தீர்வைப்பற்றி யோசிக்க முடியாது. ஆனால் யுத்தத்தை ஒத்திவைப்பது பற்றிய விடயத்தை பேசலாம். யுத்தத்தை நிகழாது தடுப்பது பற்றி பேசுவதற்கு இலங்கை வரலாற்றில் இல்லை. இந்த முரண்பாட்டினுடைய இறுதிக்கட்டம் இந்த நாடு இரண்டாகப் பிளவுபடுவதில் தான் சென்று முடியும் என்றார்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 21 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.